


நாட்டுக்கு உழைத்த நல்லவர்

சிவாஜி

நாட்டுக்கு உழைத்த நல்லவர்

சிவாஜி

எம். வி. வெங்கட்ராம்

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1
கோயம்புத்தூர் -1 மதுரை - 1

முதற்பதிப்பு : 1967
இரண்டாம் பதிப்பு - 1974

விலை : ரூ. 3-00

ஏஷியன் அச்சகம்,
சென்னை - 600014

இந்த வரிசை நூல்கள்

ஒரு நாட்டுக்குச் சிறப்பு ஏற்படுவது எதனுல் ?

நிலவளத்தாலும் நீர் வளத்தாலும் நாடு பெருமை பெறுகிறது ; மலைவளத்தாலும் மிருக வளத்தாலும் அது உயர்வு எய்துகிறது ; கனி வளத்தாலும் கானக வளத்தாலும் அது மாண்பு அடைகிறது.

இவை யாவும் சிறப்புக்களே ; ஐயமில்லை ; இந்தப் புற வளங்கள் எல்லாம் இருந்தாலும், அகவளம் - பண்பாடு - இல்லாத மக்கட் கூட்டம் மலிந்ததொரு நாட்டை யாராவது போற்று வார்களா ? ஒரு நாட்டுக்குச் சிறப்புத் தருவது, அந்நாட்டு மக்களின் பண்பாடுதான். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு ; நாடு என்பது நல்லோர் மாட்டு.

பாரதநாடு பழமையானது ; நீண்ட நெடுங்காலமாக உலகத் துக்குச் செந்நெறி காட்டி வருவது ; ஆன்மிக வலிமையால் காலத்தை வென்று வாழ்வது ; இங்கு தோன்றிய அறிஞர்கள், சிந்தனையாளர்கள், மகான்கள், தேசபக்தர்கள், தியாகச் செம்மல்கள், வீரர்கள், விஞ்ஞானிகள், தொழில் வல்லுநர்கள், மேதைகள் பலப்பலர் ; அவர்களால்தான் இந்த நாடு உயருகிறது ; உயர்ந்து உயருகிறது.

நாட்டுக்கு உழைத்த அந்த நல்லவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதால் நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும் ; அதுவே ஒரு கல்வி. இந்த நோக்கத்துடன்தான் **'நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள்'** என்ற வரிசை நூல்கள் வெளியா கின்றன.

இந்த நூல்களை முதியவர்கள் படித்தால் வலிவு பெற முடியும் ; வருங்காலக் குடிமக்களாகிய இளைஞர்கள் படித்தால் வனப்புப் பெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் ; எல்லோரும் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

பழனியப்பா பிரதர்ஸ்

உள்ளுறை



1. முன்னோர்

அன்று ஹோலிப் பண்டிகை. மாலோஜி தம் மகன் ஷாஜியை அழைத்துக்கொண்டு லக்கூஜி ஜாதவராயின் வீட்டுக்குப் போனார்; நன்னாளில் நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதும் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதும் சகஜம்தானே ?

ஜாதவராயின் இல்லத்தில் பல நண்பர்கள் கூடி இருந்தார்கள். அவர் அரசாங்கத்தில் மன்சப்தார் என்ற பெரும் பதவியை வகித்துக்கொண்டிருந்தவர் ; பணபலமும் மிகுதி ; ஆகையால் அவருக்குச் செல்வாக்கும் மிகுதி. செல்வந்தர்கள் வீட்டில் பண்டிகை நாளன்று கூட்டம் சேருவதில் வியப்பு இல்லை.

ஜாதவராய், மாலோஜியை அன்போடு வரவேற்றார். மாலோஜிக்கும் அரசாங்கத்தில் உத்தியோகம்தான் ; ஆனால் சிலாதார் என்ற சிறு பதவியில் இருந்தவர். அவருக்குச் செல்வ வசதியும் குறைவு. எனினும், இருவருக்கும் இடையில் நட்பு ஏற்பட்டது.

மாலோஜியும், அவருடைய தம்பி விட்டோஜியும் உட்கார்ந்தார்கள் ; மாலோஜியின் மடியில் சிறுவன் ஷாஜி அமர்ந்தான். அவனுடைய அழகைக் கண்டு ஜாதவராய் மிகவும் மகிழ்ந்தார். அப்போது அவருடைய மகள் ஜீஜாபாய் விளையாடிய வண்ணம் அங்கு வந்து சேர்ந்தாள் ; தகப்பனாரைப் பார்த்ததும் அவர் மடியில் ஏறி அமர்ந்தாள். ஷாஜியும், ஜீஜாபாயும் சிறிது நேரத்தில் நண்பர்களாகி, விளையாடத் தொடங்கினார்கள்.

அவர்கள் இருவரும் சேர்ந்து விளையாடுவதைப் பார்க்க ஜாதவராய்க்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இயற்கையாகவே அவர் நகைச்சுவையுடன் பேசுகிறவர். அவர்

தம்முடைய புதல்வியைப் பார்த்து, "ஜீஜி, இந்த மாப்பிள்ளை உனக்குப் பிடிக்கிறதா?" என்று விளையாட்டாகக் கேட்டார். பிறகு அவர் மாலோஜியிடம், "அழகான சோடி அல்லவா?" என்றார்.

மாலோஜி கெட்டிக்காரர். அவர் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொள்ள விரும்பினார். எல்லோருக்கும் முன்னால் எழுந்து நின்றார். "லக்கூஜி ஜாதவராய் இப்போது சொன்னதைக் கேட்டீர்களா? அவர் சொல்படி, ஜீஜாபாய் என் மருமகள்; அவர் எனக்குச் சம்பந்தி ஆகிறார். பெரிய மனிதர்கள் நான்கு பேருக்கு முன்னால் சொன்ன சொல்லை மாற்ற மாட்டார்கள்" என்று உரைத்தார்.

அவருடைய தம்பி பிட்டோஜியும் அதை ஆமோதித்தார்: "ஜாதவராய் பெரிய மனிதர்; ஒரு நாளும் சொன்ன சொல் தவற மாட்டார்."

ஜாதவராய் இவை எல்லாவற்றையும் விளையாட்டாகவே எண்ணிக்கொண்டார். அன்றையப் பொழுது கழிந்துவிட்டது. ஆனால், ஜாதவராயின் மனைவிக்கு இச்செய்தி தெரிந்ததும் கணவரைக் கடிந்துகொண்டாள்; இது ஒரு விளையாட்டு விவகாரம் என்று அவள் எண்ணவில்லை; சில உறவினர்களும் அவளை ஆதரித்தார்கள். மாலோஜி தங்களோடு உறவுகொள்ளவே தகுதியற்றவர்; ஏழை; அவர் அனுவசியமாக எதிர்பார்க்கும்படி விடக்கூடாது என்று ஜாதவராயின் மனைவி நினைத்தாள்.

அவளுடைய யோசனைப்படி, ஜாதவராய் மாலோஜிக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்; அன்று நடந்தவை யாவும் விளையாட்டாக நிகழ்ந்தவை என்றும், வேடிக்கைப் பேச்சுக்குத் தாம் கட்டுப்பட முடியாது என்றும் செய்தி அனுப்பினார்.

ஆனால் மாலோஜி அதை ஏற்பதாக இல்லை; "நல்ல மனிதர்கள் நிறைந்த சபையில் ஜாதவராய் சொன்னபடி, ஜீஜாபாயை என் மகன் ஷாஜிக்கு மணம் செய்து வைக்க வேண்டும்," என்று பதில் அனுப்பினார்.

ஏழை என்பதால் தம்மை ஜாதவராய் இழிவு செய்வதாய் மாலோஜி எண்ணினார்; விளையாட்டை வினையாக்குவதாய் ஜாதவராய் நினைத்தார். இருதரப்பிலும் பகைமை வளர்ந்து வந்தது. ஜாதவராய் பதவியும் பணமும் உடையவர்; அவர் மாலோஜி, பிட்டோஜி ஆகிய இருவரையுமே பதவியிலிருந்து அகற்றினார்.

இரு சகோதரர்களும் தங்கள் கிராமத்துக்குத் திரும்பி விவசாயத்தில் ஈடுபட்டார்கள்.

ஆனால், அவர்கள் இருவருக்குமே தாங்கள் அவமதிக்கப் பட்டதற்குப் பழிவாங்க வேண்டும் என்ற ஆத்திரம் மூண்டது. செல்வம் சேகரிக்க வேண்டும், ஜாதவராயைத் தாழ்வுபடுத்த வேண்டும் என்று தீவிரமாக இருந்தார்கள். அவர்களுடைய இந்த முயற்சிக்கு, குலதேவியான பவானி அன்னையே ஆதரவு தந்தாள் போலும்! அவர்களுக்கு ஒரு பெரும் புதையல் கிடைத்தது.

பொருளினால் அவர்களுடைய வலிமை கூடியது; அவர்கள் ஆயிரம் குதிரைகள் வாங்கினார்கள்; பல சிலாதார்களையும் சிப்பாய்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு சிறு படை அமைத்தார்கள். சமூகத்தில், ஜாதவராய்க்கு நிகராக அவர்களுடைய அந்தஸ்தும் உயர்ந்தது.

மாலோஜியும் பிட்டோஜியும் ஜாதவராயிடம் ஆளை அனுப்பினார்கள்; ஜீஜாபாயை ஷாஜிக்கு மணம் முடிக்க வேண்டும் என்று கோரினார்கள். ஜாதவராய் இப்போதும் இசையவில்லை; மாலோஜியுடன் உறவுகொள்ள அவர் விரும்பவில்லை.

சகோதரர்கள் இந்த இழிவினால் பொறுமை இழந்தார்கள். நிம்பால்கா என்பவரின் உதவியோடு ஜாதவராயின் கிராமங்களைக் கொள்ளையிடத் தொடங்கினார்கள். இதைத் தவிர, அவர்கள் ஜாதவராயின் எஜமானரான நிஜாம் ஷாவிடமும், ஜாதவராய் சபையில் சொன்ன சொல்லை நிறைவேற்ற மறுக்கிறார் என்று புகார் செய்தார்கள்.

நிஜாம் மாலோஜியின் வலிமையைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அவர் ஜாதவராயை அழைத்து, ஜீஜாபாய்க்கும் ஷாஜிக்கும் கலியாணம் செய்யும்படி கூறினார். அப்போதும், ஜாதவராய் மறுத்தார். நிஜாமும் இதனால் அவரிடம் அதிருப்தி அடைந்தார். ஜாதவராயின் அகம்பாவத்தைக் குலைக்க வேண்டும் என்று எண்ணினார் நிஜாம்; மாலோஜிக்கும் பிட்டோஜிக்கும் பன்னிரண்டாயிரம் குதிரை வீரர்கள் உள்ள படையைக் கொடுத்து, மன்ஸப்தார் என்ற பதவியும் அளித்துத் தம்மோடு வைத்துக்கொண்டார். அதைத் தவிர, அவர் மாலோஜிக்கு 'ராஜா' என்ற பட்டமும் வழங்கினார்.

மாலோஜியின் அந்தஸ்து, ஜாதவராயைவிட உயர்ந்து விட்டது. அஞ்சாமையாலும் ஆற்றலாலும் அவர் நிஜாமின் மதிப்புக்குப் பாத்திரமானுர். நிஜாம் மீண்டும் ஜாதவராயை அழைத்தார்; திருமணத்தைப் பற்றி வலியுறுத்தினுர். ஜாதவ ராய்க்கு வேறு வழி இல்லை; இனியும் மறுத்தால் நிஜாமின் பகையைத்தான் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர் உணர்ந்துவிட்டார்; ஆகையால், மணத்துக்கு அவர் உடன்பட்டார்.

1604 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஷாஜிக்கும் ஜீஜாபாய்க்கும் சிறப்பாகத் திருமணம் நிறைவேறியது; ராச்சியத்துப் பிரமுகர்களும், பெரியோர்களும் வருகை புரிந்தார்கள்.

2. வீட்டுப்பகையும் நாட்டுப்பகையும்

மாலோஜி நிஜாமிடம் பதினைந்து வருடங்கள் பணி புரிந்தார்; ராச்சியத்தைப் பல விதங்களிலும் வளர்ச்சி காணச் செய்தார்; அதிகாரிகள் எல்லோருமே அவரிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள். 1619-ஆம் ஆண்டு அவர் காலமானார்.

அவருடைய பதவி ஷாஜிக்குக் கிடைத்தது. தகப்பனாரைப் போலவே அவரும் வீரமும் உறுதியும் வாய்ந்தவர்; கூர்மையான அறிவு படைத்தவர். மணமான பிறகும் ஷாஜியின் குடும்பத்துக்கும் ஜாதவராயின் குடும்பத்துக்கும் இடையில் எழுந்த பகை தீரவில்லை. ஜாதவராயின் வமிசத்தவர்கள் நிஜாமை விடுத்து முகலாயர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

ஷாஜியோ, நிஜாமின் சார்பில் முகலாயர்களோடு போராட வேண்டியிருந்தது. ஜாதவராய் முகலாயர் தரப்பில் இருந்தாரா? எப்படியாவது ஷாஜியைக் கைது செய்துவிட வேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால், மாப்பிள்ளை ஷாஜி மாமனாரின் கையில் சிக்கவில்லை.

ஒரு முறை, ஷாஜி, மாகுலி என்ற கோட்டையிலிருந்து பின் வாங்கிக்கொண்டிருந்தார்; முகலாயர்களின் கையில் அக்கோட்டை விழுந்துவிடும் என்ற நிலைமை எழுந்தது. ஷாஜியோடு அவருடைய மனைவி ஜீஜாபாயும், மூத்த மகன் சாம்பாஜியும் இருந்தார்கள்; ஜீஜாபாய் அப்போது கர்ப்பவதி; குதிரை ஏறிப் பறக்க வேண்டியிருந்தது. துரத்திக்கொண்டு வந்தவரோ அவருடைய சொந்தத் தகப்பனார்! அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்!

கர்ப்பிணியான அவளால் குதிரைச் சவாரி செய்ய இயலவில்லை. ஷாஜி அருகிலிருந்த ஜுன்னர் கோட்டைக்கு விரைந்தார். அக்கோட்டையின் அதிபர் சீனிவாச ராவ் ஷாஜியின் நண்பர்.

அவருடைய பாதுகாப்பில் ஜீஜாபாயையும், சாம்பாஜியையும் விடுத்து ஷாஜி வேறு வழியே சென்ருர். சீனிவாச ராவ் ஜீஜா பாயையும் குழந்தையையும் சிவனேரிக் கோட்டையில் வைத்தார்.

ஷாஜி அந்த இடத்தை விட்டு நீங்கியதும் ஜாதவராய் அங்கு வந்து சேர்ந்தார் ; மாப்பிள்ளையைச் சிறை பிடிக்க வந்திருந்தார் அவர் ! நண்பர்கள் அவரை அறிவுறுத்திஞர்கள் ; மகளைக் கைது செய்து முகலாயர்களிடம் ஒப்படைப்பது மதியீனம் என்று அவர்கள் கூறியதை அவரும் ஏற்றுக்கொண்டார். ஷாஜிதானே அவருடைய விரோதி ? மகளைக் காப்பாற்ற வேண்டியது அவருடைய கடமை அல்லவா ? ஜாதவராய் தெளிவு பெற்றுப் புதல்வியைச் சந்திக்கப் போனுர்.

ஜீஜாபாய் தன்மானம் மிக்கவள் ; கணவரிடம் அன்பும் ஈடுபாடும் கொண்டவள். கணவரின் எதிரி தந்தையேயானுலும் அவர் தனக்கும் எதிரியே என்று அப்பெண்ணரசி எண்ணினுள். அவள் தகப்பனுரிடம் கூறினுள் : "கணவருக்குப் பதிலாக என்னைக் கைது செய்துகொண்டு செல்லுங்கள். அவருக்காக என்னிடம் பழி தீர்த்துக்கொள்ள விரும்பினீர்களானுல், நான் அதற்கு மகிழ்ச்சியுடன் சம்மதிக்கிறேன்."

என்ன சொல்வார் ஜாதவராய்? மகள் கூறியதைக் கேட்டு மிகவும் துயரமடைந்தார். "நடந்தது, நடந்துவிட்டது. போனதைப் பற்றி வருந்துவதால் என்ன பயன் ? நீ இப்போது என்ன செய்யப் போகிருய் ? என்னேடு வந்துவிடேன். உனக்கு ஒரு சிரமம் இராது," என்ருர் அவர்.

பதியின் பகைவரோடு போவதை ஜீஜாபாய் விரும்பவில்லை. 'நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன்," என்று கூறினுள்.

ஜாதவராய் எவ்வளவோ வேண்டிக்கொண்டும், ஜீஜாபாய் இணங்கவில்லை. ஏமாற்றத்துடனும் துயரத்துடனும் ஜாதவராய் திரும்பிச் சென்ருர். மகள் இருந்த கோட்டைக்குக் காவலாகத் தம்முடைய சில வீரர்களை நியமித்துவிட்டுப் போனுர்.

இந்த நிகழ்ச்சி நடந்து இரண்டு மாதங்களாயின. ஜீஜாபாய் வயிற்றுச்சுமையோடு மனச்சுமையாலும் தத்தளித்தாள். கணவர் போர்க்களத்திலிருந்து இன்னும் திரும்பவில்லை. அச்சமயம், விக்கிரம சகாப்தம் 1684-ஆம் ஆண்டு, வைகாசிமாதம், இரண்டாம் நாள், வளர்பிறையில் அவள் ஓர் ஆண் குழந்தையை ஈன்ருள்.

3. அன்னையால் உயர்ந்த பிள்ளை

கோட்டையின் ஆலயத்தில் இருந்த தேவிக்குச் சிவாயி என்று பெயர் ; ஆகையால், குழந்தைக்குச் சிவாஜி என்று பெயர் சூட்டப்பட்டது. ஜீஜாபாய் மூன்று ஆண்டுகள் வரை தன் குழந்தைகளுடன் அக்கோட்டையிலேயே இருந்தாள்.

ஷாஜியின் நண்பருடைய கோட்டை என்பதாலேயே அதன் மீது முகலாயர்கள் கவனம் செலுத்தி வந்தார்கள். ஷாஜி தன் மனைவியையும் குழந்தைகளையும் காண அங்கு வருவார், அச்சமயத்தில் அவரைச் சிறைபிடித்துவிட வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம். ஜீஜாபாயோ குழந்தைகளை மிகவும் பாதுகாப்பாக, முகலாயர்களின் கண்களில் படாமல் காப்பாற்றி வந்தாள். இறுதியில், முகலாயர்களுக்கும் ஷாஜிக்கும் சமரச உடன்படிக்கை ஏற்பட்டது; அவர் ஜீஜாபாயைப் பூனாவிற்கு அழைத்துச் சென்றார்.


ஜீஜாபாய் உயர்ந்த பழக்க வழக்கங்கள் உடையவள்; பெரிய வீட்டுப் பெண். பதி பக்தி, தெய்வ பக்தி, கோ பக்தி நிரம்பியவள்; சமய ஒழுக்கங்களை முறையாகப் பின்பற்றியவள். அவளுடைய குண நலன்கள் யாவும் சிவாஜியைப் பற்றின. குழந்தை சிவாஜிக்கு அன்னை ஜீஜாபாய் ராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசக் கதைகளைக் கூறுவாள் ; ராமபிரான், மாருதி, பீமன், அர்ச்சுனன் முதலிய வீரர்களின் கதையைச் சொல்வாள். அரசியல் நீதிகளைப் போதிப்பாள் ; தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்துவாள். குழந்தைக்குப் புரியும் வண்ணம் மிகவும் எளிய மொழியில் எல்லாவற்றையும் உரைப்பாள். சிவாஜி எல்லாவற்றையும் ஆவலோடு கேட்டுக்கொண்டிருப்பார்.

முகலாயர்களுடன் சமாதானம் செய்துகொண்ட ஷாஜி மீட்டும் பீஜப்பூர் தர்பாருக்கே போய்விட்டார். இங்கு அவருக்குப் பூனா, சூபா ஜாகிர்கள் மறுபடியும் கிடைத்தன. அகமது நகரில் நிஜாமின்

ஆட்சி வீழ்ச்சி அடைந்துவிட்டது. சிவாஜி பிறக்கும்போது ஷாஜி இரண்டாவது மணம் புரிந்துகொண்டு பீஜப்பூரிலேயே இருக்கலானர். அவருடைய பூனு ஜாகீரை கொண்டதேவ் என்கிற பிராமண பண்டிதர் நிர்வகித்து வந்தார்; அவருடைய நேர்மையான நிர்வாகத்தினுல் மக்கள் மிகவும் திருப்தியாக வாழ்ந்தனர். ஜீஜாபாயும் சிவாஜியும் அவருடைய கண்காணிப்பிலேயே இருந்தனர்.

தாதாஜி கொண்டதேவ் சிறு பிராயத்திலிருந்தே சிவாஜிக்கு க்ஷத்திரிய தர்மத்தைக் கற்பிக்கத் தொடங்கினர். கொண்டதேவுக்கு புத்தகப் படிப்பு என்ருலே வெறுப்பு ; குழந்தைகளின் மனத்தில் ஏற்றப்படும் படிப்பைப் பிறகு அழிக்கவே முடியாது என்பது அவர் அச்சம்! அவர் முதலில் சிவாஜிக்குக் குதிரை ஏற்றம், வில் வித்தை, வாள் போர், குஸ்தி முதலியவற்றைக் கற்பித்தார். பிறகு அவர் அரசாங்க நிர்வாகத்தை விளக்கினர். அவர் தர்பார் நடத்தும் போது சிவாஜியைத் தம்மருகில் வைத்திருப்பார் ; சிவாஜிக்கு முன்னிலையில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பும் அளிப்பார் ; சில சமயம் சிவாஜியின் கருத்தையும் கேட்டுக்கொள்வார். சிக்கலான பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்பதை விளக்கமாக உரைப்பார். குடிமக்களின் நிலைமையை நேரில் காண வேண்டி அவர் சுற்றுப் பிரயாணம் செய்வது வழக்கம் ; அப்போது சிவாஜியையும் தம்மோடு அழைத்துப் போவார். சிவாஜிக்குப் பதினன்கு வயது நிரம்புவதற்குள் போர்க்கலை, அரசியல், அரசாங்க நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்டதேவிடம் சிறப்பாகக் கற்றுக்கொண்டார்.

சிவாஜிக்குக் கட்டுக்கோப்பான உடல் ; பார்ப்பதற்கு மிகக் கம்பீரமாக இருப்பார். மனிதரின் முகத்தைப் பார்த்தே அவர்களுடைய மனப்பாங்கை அவர் எடை போட்டுவிடுவார். எந்த வேலையையும் நன்கு யோசித்தே செய்வார். நண்பர்களைத் தம் விருப்பப்படி பணியாற்ற வைப்பதில் அவர் வல்லவர். அன்னையிடமும் கொண்டதேவிடமும் பெற்ற பயிற்சியினுல் ஹிந்து தர்மத்துக்காக உயிரையும் துறக்கத் தயங்காத உறுதி படைத்தவர். கடமையில் மிகவும் கவனமாக இருப்பார். சோம்பலை அறவே வெறுத்தார். அவருடைய இந்தக் குணச்சிறப்பினுல், எல்லோரும் அவரிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள்.



சிவாஜிக்குப் பதின்மூன்றுவது வயதிலேயே மணமாகிவிட்டது. நிம்பால்கர் வமிசத்தைச் சேர்ந்த சயீபாய் என்பவளே மணப்பெண். ஷாஜி இத்திருமணத்தைப் பீஜப்பூரில் நடத்த விரும்பினர். பீஜப்பூரில் நடந்தால், முஸ்லிம்களும் கலந்துகொள்வர். ஆகையால் அங்கு கலியாணத்தை நடத்தக்கூடாது என்று சிவாஜி பிடிவாதமாக இருந்தார். ஷாஜி, மகனின் முரட்டுப்பிடிவாதத்துக்குப் பணிந்து கலியாணத்தைப் பூனுவிலேயே நடத்திவிட்டார்.

4. யாருக்கும் அடிபணியேன் !

சிறிது காலத்துக்குப் பிறகு, ஷாஜி சிவாஜியைப் பீஜப்பூருக்கே அழைத்துக்கொண்டார். இங்கு அவர் தம் தாயுடன் இரண்டு மூன்று வருடங்கள் இருந்தார். அவருடைய நாகரிகமான நடத்தை பீஜப்பூரில் இருந்த செல்வந்தர்களையும் அதிகாரிகளையும் கவர்ந்தது. அவர்கள் பீஜப்பூர் சுல்தானிடம் சிவாஜியைப் பாராட்டிப் பேசினார்கள். சுல்தானும் சிவாஜியைக் காண விரும்பினார்.

தர்பாரில் இருந்த முராரர்பந்த் என்பவர் ஷாஜியின் நண்பர்; இருவரும் கலந்து யோசித்துச் சிவாஜியை அரசவைக்கு அழைத்துச் செல்வதென்று தீர்மானித்தார்கள். முராரர்பந்த் சிவாஜியை அணுகினார்: "இன்று நீயும் எங்களோடு தர்பாருக்கு வரவேண்டும்" என்றார்.

சிவாஜி மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்; முராரர்பந்த் மேலும் கூறினார்: "தர்பாரில் மிகவும் பணிவாக நடந்துகொள்ள வேண்டும். தாழ்ந்து வணங்கிப் பாதுஷாவுக்கு மரியாதை காட்ட வேண்டும்."

அதற்கு மேல் சிவாஜியினால் பொறுக்க முடியவில்லை: "பாதுஷா வேறு மதத்தைச் சேர்ந்தவர்; அவர் முஸ்லிம். அவரைத் தீண்டினால் நான் நீராட வேண்டியிருக்கும். ஆகையால், நான் அவரைப் பார்க்க வரவில்லை. வழியில் கசாப்புக்கடைகள் இருக்கின்றன; அங்கு பசுக்களைக் கொல்லுகிறார்கள்; அதைப் பார்த்தாலே என் ரத்தம் கொதிக்கிறது. பெரியவர்களான உங்களுக்காக அஞ்சித்தான் நான் இவ்வளவையும் பொறுக்கிறேன். சுல்தானை வணங்குவதா? அவருடைய தலையை வெட்ட வாய்ப்புக் கிடைக்காதா என்றல்லவா ஏங்குகிறேன்!"

சிவாஜியின் இப்பதிலைக் கேட்டு ஷாஜியும் முராரர்பந்தும் மிக வருத்தமுற்றார்கள். அவர்களுடைய தூண்டுதலின் பேரில்

சிவாஜியின் நண்பர்கள் சிலர் அவரோடு வாதாடினார்கள் “இங்கு மட்டுமா முஸ்லிம்களின் ஆட்சி நடக்கிறது? பாரத நாடெங்குமே அவர்களே ஆளுகிறார்கள். அவர்களைப் பகைத்துக் கொண்டு நாம் எப்படி வாழ முடியும்? அவர்களுக்குப் பணியாற்றித்தானே நாமும் இவ்வளவு முன்னேற்றம் அடைந்தோம்? நீ விஷயம் தெரிந்தவனாக இருந்தும் இப்படிச் சிறுபிள்ளை போல் பேசுகிறாயே!”

“நான் அவர்களை அண்டி வாழ்ந்து முன்னேற்றம் காண விரும்ப வில்லை; ஆனால், தரைவரையில் குனிந்து பாதுஷாவை நான் வணங்க மாட்டேன்” என்றார் சிவாஜி.

அன்னை ஜீஜாபாயும் சொல்லிப் பார்த்தாள்; சிவாஜி இணங்கவில்லை. ஷாஜி கனவு கண்டுகொண்டிருந்தார்; சிவாஜிக்கு அரசாங்கத்தில் பெரும்பதவி கிடைக்கும் என்பதே அவர் கனவு. மைந்தரின் பிடிவாதம் அவர் மனத்தைப் புண்படுத்தியது. சிவாஜியைத் தனியாக அழைத்துக் கூறினார்: “சிவா, உன்னைப் பற்றி நான் எவ்வளவோ ஆசை வைத்திருக்கிறேன். உன்னுடைய இந்தப் பிடிவாதம் எனக்கு ஏமாற்றம் தருகிறது. நீ இன்னும் சிறுவன்; பெரியவர்கள் சொற்படி நடப்பதே உன் கடமை.”

“உங்களுடைய விருப்பப்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால் முஸ்லிம்கள் கோ வதை புரிவதையும், பிராமணர்களைத் துன்புறுத்துவதையும் என்னால் சகிக்க முடியவில்லை.”

ஷாஜி பீஜப்பூர் சுல்தானிடம் தொண்டு செய்தாலும் உடல் வலிமையுடன் மனவலிமையும் படைத்தவர். காலத்தோடு ஒட்டி ஒழுக வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். சிவாஜியின் பிடிவாதம் அவருக்கு வருத்தம் அளித்தது; ஆயினும், புதல்வரின் மதநம்பிக்கையையும் மனவுறுதியையும் அவர் உள்ளுக்குள் வியந்தார். சுல்தானின் விருப்பத்தை நிறைவேற்றி, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே அவர் விருப்பம். சுல்தானின் தர்பாருக்குள் நுழைந்ததும் தரை தொட்டு வணங்குவது எப்படி, மறுபடியும் சைகை பெற்றதும் ஆதனத்தில் எப்படி உட்காருவது என்பதையும் அவர் தெளிவாகச் சிவாஜிக்குக் கற்றுக்கொடுத்தார்.

தந்தையும் மகனும் அரண்மனைக்குச் சென்றார்கள். சிவாஜி தர்பாரில் தரையைத் தொட்டு முறைப்படி வணங்கவில்லை. சாதாரணமாக ஒருவரை ஒருவர் வணங்குவது போல் வணங்கி விட்டுத் தகப்பனருக்கு அருகில் சென்று அமர்ந்தார்.

முன் பின் பழக்கமில்லாத ஓர் இளைஞன் இவ்வாறு தர்பாரில் வந்து உட்கார்ந்ததைக் கண்ட சுல்தான் முரார்பந்திடம் கேட்டார்: "யார் இவன்? ஷாஜி ராஜாவின் மகனோ?"

"ஆம், இவன் ஷாஜி ராஜாவின் புதல்வன்தான். இன்றுதான் புதிதாகத் தர்பாருக்கு வருகிறான். தர்பார் விதி முறைகள் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. ஆகையால்தான் அவன் முறைப்படி வணங்கவில்லை" என்று முரார்பந்த் உசிதமான பதில் அளித்தார்.

சுல்தானுக்கு அச்சமயத்தில் சிவாஜியைப் பற்றி ஐயம் எழவில்லை. அன்போடு சிவாஜியைத் தம்மருகில் அழைத்தார்; விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைப் பரிசாக வழங்கினார். ஷாஜிக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால், வீட்டுக்குத் திரும்பியதும் சிவாஜி தர்பார் உடைகளைக் களைந்தெறிந்தார்; நீராடினார்; அப்புறம்தான் அவருக்கு ஆறுதல் ஏற்பட்டது.

பிறகும், ஷாஜி பல முறை சிவாஜியை அரசவைக்கு அழைத்துக்கொண்டு போனார். ஆனால், ஒரு முறையும் சிவாஜி தரையைத் தொட்டுச் சுல்தானைக் கும்பிடவில்லை. சுல்தான் கவனியாமலிருந்தார் முதலில்; பிறகு அவருக்கும் சந்தேகம் வந்துவிட்டது; 'இந்த இளைஞன் வேண்டுமென்றே நம்மை இழிவு செய்கிறானோ?' என எண்ணினார். அவர் சிவாஜியை அழைத்துக் கேட்டார்.

சிவாஜி சற்றும் தயங்காமல் விடையிறுத்தார்: "தர்பாரின் ஒழுக்க விதிகள் எல்லாவற்றையும் அப்பா எனக்கு நன்றாகக் கற்றுக்கொடுத்துள்ளார்; ஆனால், உங்களுக்கு முன்னால் வந்ததும் முறைப்படி வணங்க மறந்துவிடுகிறேன். அதற்காக உங்கள் மன்னிப்பை வேண்டுகிறேன். பாதுஷாவை என் தந்தையாருக்குச் சமமாகப் பாவிக்கிறேன்; தங்களையும் அவரையும் வேறு வேறாக எண்ண என்னால் முடியவில்லை."

சிவாஜியின் இந்தப் பதில் சுல்தானுக்குத் திருப்தி அளித்தது. சிவாஜியின் மீது அவருக்குச் சந்தேகம் உண்டாகவில்லை.



சிவாஜி அரண்மனைக்குப் போகும் வழியில் பல கசாப்புக் கடைகள் இருந்தன ; அவற்றில் பசு இறைச்சியும் விற்கப்பட்டது. வெட்டுண்ட விலங்குகளின் தலைகளைச் சில சமயம் காட்சிப் பொருள் களாகத் தொங்கவிடுவார்கள். அந்தக் கசாப்புக்கடைக்காரர் களையும் கடைகளையும் பார்த்தாலே அவருக்கு வெறுப்பாக இருக்கும். அவரோடு எப்போதும் தந்தையார் இருந்ததால் அவர் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால், அவர் உள்ளத்தில் மிகுந்த வேதனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

ஒரு நாள் தகப்பனார் இல்லாமல் சிவாஜி தனியாக அரண் மனைக்குச் சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு கசாப்புக்கடைக் காரன் ஒரு பசுவைக் கொல்ல ஏற்பாடு செய்வதைச் சிவாஜி கண்டார். அவரால் பொறுக்க முடியவில்லை ; கசாப்புக்கடைக்காரன் மீது பாய்ந்தார். உதைகளும் குத்துகளுமாகப் பொழிந்து தள்ளி விட்டார் ; கசாப்புக்காரன், 'தப்பினால் போதும்' என்று ஓட்டம் பிடித்தான். அன்று அப்பசு பிழைத்தது.

சற்று நேரத்தில் இச்செய்தி பீஜப்பூர் முழுவதும் பரவிவிட்டது. சில முஸ்லிம்கள் சினமூண்டு சுல்தானிடம் முறையிட்டார்கள். ஆனால், அரசவையில் ஷாஜிக்கு இருந்த செல்வாக்கினால் இவ்விஷயம் விசாரணை இல்லாமலே அடங்கிவிட்டது.

ஒரு கசாப்புக்கடைக்காரனைத் தண்டிப்பதால் பசு வதையைத் தடுத்துவிட முடியுமா? பீஜப்பூரிலேயே கோ வதை தடை செய்யப் பட வேண்டும் என்று சிவாஜி விரும்பினார். ஆனால், இஸ்லாமிய ஆட்சியில் அதை எதிர்பார்க்க முடியுமா ? இவ்வாறு பல யோசனை கள் செய்த பின் அவர் இனி அரசவைக்கே போவதில்லை என்று முடிவு செய்தார். ஆனால், கட்டாயமாக அரசவைக்குப் போக வேண்டும் என்று தந்தையார் கட்டளை இட்டிருந்தார். அவருக்குச் சங்கடமாக இருந்தது. தந்தையின் சொல்லை மீறுவதும் பாவம் ; தர்மத்தைக் காப்பாற்ற வேண்டியதும் அவசியம் ; இரண்டில் எதைச் செய்வது ?

அவர் தகப்பனாரிடம் உரைத்தார் : "அப்பா, இனி நான் தர்பாருக்கு வரப் போவதில்லை ; வழியில் பசுப்புலால் கடைகள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் எனக்கு மிகவும் துன்பமாக இருக்கிறது. கோ வதையை நிறுத்தாவிட்டால், பாதுஷாவுடன்

எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளப் போவதில்லை. நீங்கள் அரசாங்க ஊழியர்; நீங்கள் ஹிந்து தர்மம் இழிவு செய்யப்படுவதை ஏற்கலாம்; ஆனால் என்னால் இதைப் பொறுக்க முடியவில்லை."

பிள்ளையின் பிடிவாதம் தந்தைக்குத் தெரியாதா? அவருக்குக் கவலை உண்டாகிவிட்டது. சிவாஜி ஏன் வரவில்லை என்று சுல்தான் கேட்டால் என்ன பதில் கூறுவது? தர்பாரில் மீர்ஜும்லா என்ற ஒரு நண்பர் இருந்தார்; அவரிடம் ஷாஜி தம் சங்கடத்தைத் தெரிவித்தார். இருவரும் கலந்துகொண்டு, சிவாஜியை அன்று தர்பாருக்கு அழைத்துப் போவதில்லை என்று தீர்மானித்தார்கள். 'சுல்தானுக்கு நான் சமாதானம் சொல்கிறேன்,' என்றார் மீர்ஜும்லா.

இருவரும் அரசவைக்குப் போனார்கள். சுல்தான் மகிழ்ச்சியாக இருந்த நேரம் பார்த்து மீர்ஜும்லா கூறினார்: "பாதுஷாவின் ராச்சியத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். இருவகுப்பினருக்கும் பாதுஷா தந்தை போன்றவர். ஆனால், பசுவதை நடப்பதால் ஹிந்துக்கள் மிகவும் மனவருத்தம் அடைகிறார்கள். எல்லோரும் தங்கள் மதாசாரப்படி ஒழுக அனுமதிப்பதே அரச நீதியாகும். பசுவதை செய்பவர்களைப் பார்ப்பதும் பாவம் என்று ஹிந்துக்கள் எண்ணுகிறார்கள். ஆக, ஹிந்துக்களின் துயரத்தை என்னால் வருணிக்க முடியாது. இன்று ஷாஜியின் புதல்வன் சிவாஜி தர்பாருக்கு வரவில்லை. வழியில் கசாப்புக்கடைகள் இருப்பது அதற்குக் காரணம்; இவ்விஷயத்தில் தகப்பனார் அசட்டையாக இருக்கிறார் என்று அவர்மீதுகூட அவனுக்கு வருத்தம். ராஜா ஷாஜி தங்களிடமுள்ள மரியாதை காரணமாக ஒன்றும் சொல்லவில்லை. ஷாஜியின் மனம் மேலும் புண்ணடையும்படி விடக்கூடாது. என் கோரிக்கையைப் பாதுஷா நிறைவேற்றுவார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

மீர்ஜும்லா மிக அழகாக விஷயத்தை உரைத்தார். சுல்தானும் அதைப் பற்றி யோசித்து ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதன்படி பிஜப்பூர் ராஜ்யத்தில் யாரும் பசு வதை புரியக் கூடாது; பசு இறைச்சி விற்கக் கூடாது; இந்த ஆணையை மீறுவோருக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்பது சட்டமாயிற்று. சட்டத்தை மீறி யாராவது பசுவைக் கொன்றால், அதனால் ஆத்திரமுற்று

ஹிந்துக்கள் அவர்களைத் தண்டித்தால் அரசாங்கம் அதில் குறுக்கிடாது என்றும் அறிவிக்கப்பட்டது.

சுல்தானின் இந்த அறிவிப்பினால் நகரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கசாப்புக்கடைக்காரர்கள் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாகக் கடைகளை நடத்த நேர்ந்தது. பிறகுதான் சிவாஜி தர்பாருக்கு வரலானார். அவருடைய சமயப்பற்று சுல்தானுக்கு மகிழ்ச்சி அளித்தது. முன்னைவிட மிகுதியாகச் சிவாஜிக்கு ஆடை ஆபரணங்களை வழங்கித் தம் அன்பை வெளியிட்டார்.

ஒரு நாள் நண்பர்களுடன் குதிரை ஏறி சிவாஜி வேட்டையாடச் சென்றுகொண்டிருந்தார். நகர வாயிலில் ஒரு கசாப்புக்கடைக்காரன் பசு இறைச்சியை விற்றுக்கொண்டிருந்தான். சிவாஜி அதைக் கண்டுவிட்டார்; வாளை உருவினார்; கடைக்காரன் கழுத்தை வெட்டினார்; கசாப்புக்கடையில் மனித இறைச்சியும் இருந்தது இப்போது!

சற்று நேரத்தில் இச்செய்தி நகரமெங்கும் தெரிந்துவிட்டது. கசாப்புக்காரன் மனைவி அழுது புலம்பிக்கொண்டே சுல்தானிடம் முறையிட்டாள். "பசு இறைச்சியை விற்பது சட்ட விரோதம் என்று அறிவித்த பின் உன் கணவன் இக்காரியம் செய்யலாமா? சிவாஜி செய்ததில் தவறு இல்லை," என்ற சுல்தான் அவளுக்கு நான்கு ரூபாயும், அரசாங்கக் களஞ்சியத்திலிருந்து நாளுக்கு ஒரு சேர் ரொட்டியும் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவு அளித்து அவளை அனுப்பிவைத்தார்.

இதனால் பீஜப்பூர் முஸ்லிம்கள் சிலர் ஆத்திரம் அடைந்தார்கள். 'இந்த ராச்சியத்தில் நீதி அஸ்தமித்துவிட்டது' என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். 'இஸ்லாம் ஆட்சியில் ஹிந்துக்களுக்குச் சலுகை அளிப்பதா? இப்படி அந்தச் சிவாஜிக்குச் சுல்தான் சலுகை அளிக்கலாமா?' என்று சினந்தார்கள்.

முஸ்லிம்களின் கோபத்தைப் பற்றி ஷாஜியும் கேள்விப்பட்டார். இந்த நிலையை வளரவிடுவது தவறு என்று அவருக்குத் தோன்றியது. அவரும், பிறகு ஜீஜாபாயும் சிவாஜிக்குப் பல விதங்களில் அறிவுறுத்தினார்கள். "தர்மத்தைக் காப்பதற்காக

நான் உயிரையும் இழக்கத் தயார்'' என்று சிவாஜியின் உறுதியான பதில் பெற்றேருக்குக் கலக்கம் அளித்தது.

இச்சமயத்தில், பூனவிலிருந்து தாதாஜி கொண்டதேவ் கணக்கு வழக்குகளுடன் வந்து சேர்ந்தார். ஷாஜி ஜீஜாபாயையும் சிவாஜியையும் அவரோடு பூனுவுக்கு அனுப்பிவைத்தார்.

5. குருவை மிஞ்சிய சீடன்

சிவாஜி பீஜப்பூரில் தந்தையோடு சுமார் மூன்ருண்டுகள் இருந்தார்; ஆனல், அவர் மனத்தில் மகிழ்ச்சி என்பதில்லை. ஹிந்துக்களின் அடிமை மனப்பான்மை அவருக்கு மிகவும் வேதனை தந்தது; தம் தர்மம் அவமதிக்கப்படுவதைக் கண்டால் அவர் நெஞ்சு குமுறியது. நம் அருமைத் தாயகத்தில் மறுபடியும் ஹிந்து ஆட்சி ஏற்பட வழியே இல்லையா என்று அவர் அடிக்கடி சிந்திப்பார்.

சாதுக்களான துகாராமும், சமர்த்த குரு ராமதாசும் அவருடைய ஆர்வத்தைத் தூண்டிவிட்டார்கள். 'ஹிந்து ராச்சியம் நிறுவ என்னல் இயலாதா?' என்று அவர் அடிக்கடி சிந்திப்பார். பூனவுக்குப் போன பிறகு இந்த விஷயங்களைப் பற்றி அவர் அமைதியாக ஆலோசனை செய்தார். 'என்னல் இயலும்,' என்று துணிந்த அவர், 'நான் செய்வேன்' என்று முயற்சியில் இறங்கினர்.

பூனவுக்கு அருகில் ஒரு மலைசாதியினர் வசித்து வந்தார்கள்; அவர்களுக்கு மாவலிகள் என்று பெயர். இச்சாதியைச் சேர்ந்த ஆடவர்கள் துணிவும் வீரமும் மிக்கவர்கள். சிவாஜி, அவர்களுடைய கிராமங்களுக்குச் சென்ருர். அவர்களுக்கு இடையில் ஒற்றுமை, வீரம், சுதந்தரம் பற்றிப் பிரச்சாரம் செய்தார். அவர்கள் பரம ஏழைகள். அவர்களுக்குப் பொருளுதவியும் செய்தார். இவ்வாறு அச்சாதி மக்கள் எல்லாருமே அவரிடம் அன்பும் நன்றியும் கொண்டு அவருடைய கட்டளைப்படி நடக்கலானுர்கள். சிவாஜி மிகவும் சுலபமாக மாவலிகள் கொண்ட ஒரு நல்ல படையைத் திரட்டினர். அவருக்கு உதவியாக யேசாஜி கங்க், தானுஜி மால்சுரே, பாஜி பசல்கர் என்ற நண்பர்கள் உழைத்தார்கள்; இந்த நண்பர்களும் மாவலி சமூகத்தைச் சேர்ந்தவர்களே.

விக்கிரம சகாப்தம்1700-ஆம் வருடம்; சிவாஜிக்கு அப்போது பதினாறு வயதுதான். மாவலில் ரோஹித் என்னும் கோட்டை ஒன்று இருந்தது; கோட்டைக்குள் ரோஹிதேசுவரர் ஆலயம் ஒன்று. அது பீஜப்பூரின் நிர்வாகத்தில் இருந்தது; பீஜப்பூரின் சார்பில் அங்கு ஒரு பூசாரியும் இருந்தார். அப்பூசாரியை நீக்கிவிட்டுச் சிவாஜி புதிய பூசாரியை நியமித்தார்.

பிஜப்பூர் அரசவை அதிகாரியான தாதாஜி தேஷ்பாண்டே என்பவர் சிவாஜியின் இச்செய்கையைக் கேட்டு மிக மகிழ்ந்தார். பிஜப்பூர் அமைச்சர் தேஷ்பாண்டே சிவாஜியுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று கடிதம் எழுதினர். தாதாஜி தேஷ்பாண்டே சிவாஜிக்கு பிஜப்பூர் அமைச்சரின் கடிதம் பற்றித் தெரிவித்தார். அதற்குப் பதில் எழுதும் முறையில் சிவாஜி குறிப்பிட்டார் : "பீஜப்பூர் அரசோடு எனக்கு யாதொரு பகையும் இல்லை. ரோஹிதேசுவரர் ஆலயத்தில் உள்ள தேவி, ஒரு சுதந்தரமான ஹிந்து ராச்சியத்தை ஏற்படுத்தும்படி எனக்கு ஆணையிட்டிருக்கிருள்."

ஹிந்து ஆட்சியை ஏற்படுத்த சிவாஜி மேற்கொண்ட திட்டத்தின்படி நடந்த முதல் செய்கை, ரோஹிதேசுவரர் ஆலயத்தைக் கைப்பற்றியதுதான். இந்த வீரச்செயலால் மாவலி மக்கள் சிவாஜியை முன்னைவிட மிகுதியாக நேசிக்கத் தொடங்கினர்கள். நாளுக்கு நாள் அவருடைய படை பலம் கூடிக் கொண்டே வந்தது. மூன்று ஆண்டுகளுக்குள் அவர் 'தோரண்' என்ற கோட்டையைப் பிடித்துவிட்டார் ; இக்கோட்டை ஷாஜியின் ஜாகீருக்குத் தென் கோடியில் உள்ளது. அக்கோட்டையைக் கைப்பற்ற ரத்தமும் சிந்தவில்லை. அவருடைய நண்பர்களான யேசாஜிகங்க், தானுஜி மால்சுரே, பாஜீ பசல்கர் ஆகியோர் கோட்டைக்காரனைச் சந்தித்து மிரட்டியதும் அவன் அவர்கள் சொல்வது போல் நடக்க ஒப்புக்கொண்டான்.

தோரன் கோட்டை இடிந்து கிடந்தது ; சிவாஜி அதைச் செப்பனிட்டார் ; செப்பனிடும்போது அவருக்கு அங்கு ஏராளமான பொருள் கிடைத்தது. அதைக் கொண்டு அவர் போர்க்கருவிகள் பல வாங்கினர் ; கோட்டையின் பாதுகாப்புக்கான ஏற்பாடும் செய்தார்.

தோரண் கோட்டைக்காரன் சில நாட்களுக்குப் பிறகு பீஜப்பூர் சுல்தானிடம் முறையிட்டான். 'கோட்டையின் நிலைமை அபாயகரமாக இருந்தது; அதற்குத் தேவையான சீர்திருத்தம் செய்யவே நான் அதை வசப்படுத்திக்கொண்டேன். கோட்டையைச் செப்பனிட்டால் பீஜப்பூர் அரசாங்கத்துக்கும் அதிக வருமானம் கிடைக்கும்' என்று சிவாஜி சுல்தானுக்குத் தகவல் அனுப்பினர். சுல்தான் அரசாங்கம் வழக்கம் போல் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிவாஜி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கோட்டையையும் தம்மையும் பலப்படுத்திக்கொண்டார்.

தோரண் கோட்டைக்கு ஆறு மைல் தொலைவில் முர்வாத் என்னுமொரு இடம் இருந்தது. சிவாஜி அங்கு ஒரு புதிய கோட்டையைக் கட்டினர்; அதற்கு ராஜ்கட் என்று பெயரிட்டார். தோரணைக் கைப்பற்றிப் புதிய கோட்டையையும் கட்டிய சிவாஜியைப்பற்றிப் பூனாவிலும் அக்கம்பக்கத்திலுமிருந்த இளைஞர்கள் கேள்விப்பட்டார்கள்; அவர்களும் சிவாஜியின் பக்தர்களானர்கள்; அவருக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் துறக்கத் தயாராக இருந்தார்கள்.

தாதாஜி கொண்டதேவ் ஷாஜியின் பூனா ஜாகீரை நிர்வகித்து வந்தார். அவருடைய மாணவர்தானே சிவாஜி? ஆனல், சிவாஜியின் செய்கைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் பல முறை தம் பழைய மாணவருக்கு அறிவுறுத்தினர்; ஆனல், சிவாஜி கேட்பவராக இல்லை; தம் விருப்பப்படியே ஒழுகினர்; கடைசியில் கொண்டதேவ் ஷாஜியிடம் சிவாஜியைப் பற்றிப் புகார் செய்தார். அங்கு, பீஜப்பூர் அரசாங்கம் சிவாஜியின் செயல்களுக்குக் காரணம் கூறும்படி ஷாஜியைக் கோரியது.

ஷாஜி அச்சமயத்தில் பீஜப்பூர் சுல்தானுக்காகக் கர்நாடக யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்; அவர் சுல்தானுக்குப் பின் வருமாறு பதில் எழுதினர்: "இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. சிவாஜி கெட்ட நோக்கத்தோடு இப்படிச் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை. அவனுடைய செயலால் தர்பாருக்கு நன்மையே உண்டாகும்."

ஷாஜி தாதாஜி கொண்டதேவுக்கும் எழுதினர்; சிவாஜிக்கு அறிவுறுத்தி இத்தகைய செயல்களில் இறங்காமல் தடுக்கும்படி

வேண்டினார். ராஜகட்டைக் கைவிடும்படி அவர் சிவாஜிக்கும் எழுதினார். சிவாஜியோ எதையும் பொருட்படுத்தவில்லை.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு, கொண்டதேவ் நோய்வாய்ப் பட்டார். சிவாஜி தம் ஆசிரியரின் அருகிலிருந்து சேவை செய்தார். கொண்டதேவ் மிகவும் மகிழ்ச்சியுற்றார். அவர் சிவாஜியிடம் கூறினார்: "நான் அவ்வப்போது உன் செய்கைகளைக் கண்டித்து வந்தேன். உன்னுடைய நன்மைக்காகவே அப்படிச் செய்தேன். ஹிந்து ராச்சியம் ஏற்படுத்த வேண்டும் என்ற உன் கனவு பலிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்." பிறகு அவர் வேலைக்காரர் களை அழைத்து அவர்கள் இனி சிவாஜியின் ஆணைப்படி நடக்க வேண்டும் என்று பணித்தார். சில நாட்களுக்குப் பின் கொண்டதேவ் காலமானார். பூனா ஜாகீரின் நிர்வாகம் சிவாஜியின் கையில் வந்துவிட்டது.

நிர்வாகம் வந்ததும் எதிர்ப்பும் வந்தது. கொண்டதேவுக்கு அடங்கி நடந்த சர்தார்களே அவரை எதிர்க்கத் தலைப்பட்டார்கள். சிவாஜியின் சிற்றன்னைக்குச் சகோதரர் - தாய் மாமன் - இந்த எதிரிக் கும்பலோடு சேர்ந்துகொண்டார். சிவாஜி முந்நூறு வீரர்களுடன் மாமாவின் 'சூபா' என்ற கோட்டைமீது படை யெடுத்து அதைக் கைப்பற்றினார்.

சூபா கோட்டை வீழ்ந்ததும், சிவாஜியின் புகழ் வளர்ந்தது. சாகண், இந்தர்புர், பாராமதி, கோடாவத், புரந்தர் என்று ஒவ்வொரு கோட்டையாக அவரிடம் சரணடைந்தன. கோடாவத் கோட்டை தான் பின்னர் சிம்மகட் (சிம்மக்கோட்டை) என்று பெயர் பெற்றது. இக்கோட்டைகளைக் கைப்பற்றுவதற்கு ஏராளமாகப் பணச் செலவு ஆயிற்று. பழுதுபட்டுக் கிடந்தவற்றை அவர் புதுப்பித்தார்; அவருடைய பொக்கிஷம் காலியாயிற்று.

தாணா என்ற ராச்சியத்திலிருந்து பீஜப்பூர் சுல்தான் ஆதில் ஷாவின் பொக்கிஷம் தலைநகருக்குப் போவதாய் அவருக்குச் செய்தி வந்தது. சிவாஜி முந்நூறு குதிரை வீரர்களுடன் சென்று பீஜப்பூர் பொக்கிஷத்தைக் கைப்பற்றினார். இந்தக் கொள்ளையைப் பற்றிய செய்தி பீஜப்பூருக்கு எட்டு முன், பீஜப்பூருக்குச் சொந்தமான எட்டுக் கோட்டைகளைச் சிவாஜி கைப்பற்றிவிட்டார்.

6. அறத்தின் காவலர்

உண்மையான நண்பர்கள் ஒத்துழைப்பு அளித்ததுதான் சிவாஜியின் பெரிய பாக்கியம். சிவாஜி ஒரு புறம் மேலே கூறிய ஒன்பது கோட்டைகளைப் பிடித்துக்கொண்டிருந்தார்; ஆனாஜி சோனதேவ் கல்யாண் கோட்டையைக் கைப்பற்றி அதன் நிர்வாகி மௌலானா அகமதைக் கைது செய்தார்.

இந்தப் போரில் சோனதேவின் கையில் பல விலையுயர்ந்த பொருள்கள் சிக்கின. மௌலானா அகமதுடன் அவருடைய மருமகளும் பிடிபட்டாள். சிவாஜியின் சபையில் அகமது கொண்டு வரப்பட்டார்; அவரை மரியாதையுடன் பீஜப்பூருக்கு அனுப்பினார் சிவாஜி. பிறகு அகமதின் மருமகள் சபையில் அழைத்துவரப் பட்டாள். அவளுடைய அழகைக் கண்டு சபையோர் திகைத்து விட்டார்கள். 'சிவாஜி மகாராஜாவே இப்பெண்மணியை ஏற்க வேண்டும்,' என்பது அவளைச் சிறை செய்த சோனதேவின் விருப்பம்; பகைவரின் பெண்ணுக்குச் சிவாஜி அவ்வளவு கௌரவம் அளிக்கமாட்டார் என்று சிலர் எண்ணினார்கள்.

சிவாஜி அவளைப் பார்த்ததும் களிப்புடன் கூறினார்: "ஆகா! என்ன அழகு! என் தாயார் இவ்வளவு அழகாக இருந்திருந்தால், நான் இன்னும் அழகாய்ப் பிறந்திருப்பேன்!"

சிவாஜி அவளைச் சொந்த மகள் போல் அன்பாக நடத்தினார்; மறு நாள் பல நகைகளும் ஆடைகளும் வழங்கி, சில படை வீரர்களின் பாதுகாப்போடு அவளை வீட்டுக்கு அனுப்பினார்.

சிவாஜியின் இந்த அரிய ஒழுக்கத்தைக் கண்டு அந்தப் பெண்ணும் பெரும் வியப்படைந்தாள்; அவரை வாழ்த்திவிட்டுத் திரும்பினாள். அவருடைய இச்செய்கையைப் பகைவர்களும் பாராட்டினார்கள்; நண்பர்களோ அவரைத் தெய்வமாகப் போற்றலானார்கள்.

கொங்கணத்துக்குத் தெற்கே, கடற்கரையில் இருந்த ராஜாபூர் என்ற நகரத்தைச் சிவாஜி கைப்பற்றினர். அந்த நகரவாசியான பாலாஜி ஆனுஜி என்பவன் அவரிடம் வேலை நாடி வந்தான். கடிதப் போக்குவரத்தைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவனுக்கு அளித்தார் சிவாஜி ; அவனுடைய கையெழுத்து மிகவும் அழகாக இருந்தது ; கடிதங்களின் வாசகமும் நேர்த்தியாக இருந்தது ; அவனுக்கு ஞாபக சக்தியும் மிகுதி.

ஒரு முறை சிவாஜி தம் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதும்படி பாலாஜிக்குக் கட்டளை இட்டார். அலுவல்கள் அதிகமாக இருந்ததால் பாலாஜி அதை மறந்துவிட்டான். மறுநாள் சிவாஜி கடிதம் பற்றிக் கேட்டதற்கு, 'எழுதிவிட்டேன்' என்று அவன் பதிலளித்தான். 'படி, கேட்கிறேன்,' என்றார் சிவாஜி. வெறும் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு கடிதம் முழுவதையும் சொல்லிக் காட்டினன். கடிதத்தின் வாசகம் சிவாஜிக்கு மிகவும் திருப்தி அளித்தது. "கடிதத்தைத் திருத்தமாக எழுதி கையொப்பத்துக்கு வருகிறேன்,'' என்று அப்பால் நழுவினன் பாலாஜி.

மற்றொரு வேலைக்காரன் பாலாஜி செய்த தந்திரத்தைச் சிவாஜியிடம் தெரிவித்துவிட்டான். மறு நாள் சிவாஜியிடம் பாலாஜியும் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான் ; அவன் எழுதிவந்த கடிதம் முன்னாள் அவன் சொன்னவாறே இருந்தது.

பாலாஜி தனக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று காத்திருந்தான். சிவாஜி பணியாளுக்குச் சாடை காட்டினர். வெள்ளித் தட்டில் பரிசுகளோடு ஓர் ஓலையும் இருந்தது. பாலாஜியின் ஞாபக சக்தியையும் எழுத்துத் திறனையும் பாராட்டி அவனுக்குப் பதவி உயர்வு செய்வதாக ஓலை அறிவித்தது.

திறமையைச் சிவாஜி இவ்வாறு போற்றினர்.

7. வெற்றிக்குமேல் வெற்றி

ஷாஜியின் மகன் தன்னுடைய கோட்டைகளை ஒன்றன் பின் ஒன்ருய்க் கைப்பற்றுவதைக் கேள்விப்பட்டுப் பீஜப்பூர் சுல்தான் சினமும் அச்சமும் அடைந்தார். சிவாஜியை எதிர்த்துப் போராட அவர் துணியவில்லை. ஷாஜியைக் கைது செய்து சிறையில் அடைத்தார். "உங்களுடைய பிள்ளை செய்யும் காரியங்களுக்கு நீங்கள் பொறுப்பல்ல என்பதை என்னுல் நம்ப முடியவில்லை; நீங்களும் உடந்தையாக இருந்துதான் எல்லாவற்றையும் செய்கிறீர்கள்; இல்லாவிட்டால், அந்த இளைஞன் இவ்வளவு துணிச்சலாக இருப்பானு? குற்றத்தை ஒப்புக்கொண்டு பரிகாரம் தேடுங்கள்; இல்லாவிடில், இந்தச் சிறையே உங்களுக்குக் கல்லறையாகும்" என்ருர் சுல்தான். ஷாஜி தமக்கு ஒன்றும் தெரியாது என்று எவ்வளவோ மன்ருடியும் சுல்தான் அதைக் கவனிக்கவில்லை.

சுல்தான் ஆதில்ஷா அச்சிறையின் வாசலில்கூடச் சுவர் எழுப்பிவிட்டார்: காற்றுப் புகுவதற்கு மட்டும் ஒரு சிறு இடைவெளி இருந்தது. பல நாட்கள் வரை ஷாஜி இப்படி அடைபட்டுக் கிடந்தார். சுல்தானுக்காக அவர் தம் உயிரையே பணயம் வைத்தவர். இப்போது சுல்தானே அவரைச் சிறையில் அடைத்து விட்டார். யாரை நோவது? அவருக்குச் சிவாஜியிடம்தான் வருத்தம் உண்டாயிற்று.

சிவாஜியும் தந்தை சிறையுண்டதைக் கேள்விப்பட்டார்; மிகவும் கலக்கம் கொண்டார். அவருடைய வீரபத்தினி சயீபாய் அப்போது ஒரு நல்ல யோசனை கூறினுள்.

"இச்சமயத்தில் நீங்கள் சாதுரியமாக வேலைசெய்ய வேண்டும். டில்லி பாதுஷா ஷாஜஹானேடு சேர்ந்துகொண்டால் பீஜப்பூர் சுல்தான் வழிக்கு வருவார்."

மனைவியின யோசனை சிவாஜிக்குப் பிடித்தது. அவர் நேராக ஷாஜஹானிடம் போகவில்லை; ஒரு கடிதம் எழுதினார்: 'நீங்கள் என் தந்தையாரை விடுவித்தால், நீங்கள் தெற்கு ராச்சியங்களை வெல்வதற்கு நான் உங்களுக்கு உதவுகிறேன்,' என்று அவர் தம் கடிதத்தில் குறிப்பிட்டார்.

ஷாஜஹான் சிவாஜியின் யோசனையை ஏற்றார். பீஜப்பூர் சுல்தானுக்கு உத்தரவு சென்றது. ஷாஜி விடுதலையானார்.

ஆனால், சுல்தான் மனத்துக்குள் கறுவிக்கொண்டிருந்தார். சிவாஜியை எவ்விதத்திலாவது கொன்றுவிட விரும்பினார். அதற்காகப் பாஜி சியாமராஜ் என்பவனை ஏவினார். ஆனால், இச்செய்தி ஒற்றர் வாயிலாக சிவாஜிக்கு உடனே எட்டிவிட்டது. சியாமராஜ் சிவாஜியைக் கண்டுபிடிக்க எத்தனையோ முயற்சிகள் செய்தான்; ஒன்றும் பலிக்கவில்லை; அவன் பீஜப்பூருக்கே திரும்பிவிட்டான்.

சியாம ராஜுக்கு ஜாவலி என்ற கோட்டை அதிபர் சந்திரராவ் மோரே பல உதவிகள் புரிந்தான். அந்தக் கோட்டையின் மீது படையெடுத்து சிவாஜி கைப்பற்றினார். ஜாவலிக் கோட்டைக்கு அருகில் சிவாஜி மற்றொரு கோட்டை கட்டி அதற்குப் 'பிரதாப்கட்' என்று பெயரிட்டார். அங்கு அவருடைய குலதேவியான பவானிக்கு ஓர் ஆலயம் எழுப்பினார்.

ஜாவலியே ஒரு பெரிய கோட்டை; அது வீழ்ந்ததும் பக்கத்திலிருந்த பல கோட்டைக்காரர்கள் சிவாஜியுடன் தாமாகச் சேர்ந்துகொண்டார்கள். சிறிது காலத்துக்குள்ளேயே சிவாஜியின் ஆட்சிக்குக் கீழ் பல கோட்டைகள் வந்துவிட்டன; மிகச்சிறந்த படைத்தலைவர்களும் வீரர்களும் அவருக்குத் துணை நின்றனர்; பல அறிஞர்களின் நட்பும் அவருக்குக் கிடைத்தது. இப்போது அவருக்குப் பணம், அன்னம், நிலம் முதலியவற்றில் எதற்கும் பஞ்சமில்லை. ஆகையால், அவர் ஹிந்து ராஜ்யத்தை, நிறுவியாகிவிட்டது. மோரோ திரம்பக் பிங்கலே முதன் மந்திரி — பேஷ்வா; நீலோன் ஸோன் தேவ், நிதிமந்திரி; கங்காஜி மங்காஜீ செய்தி மந்திரி; இவ்வாறு பல அமைச்சர்களைக்கொண்ட ஒரு மந்திரி சபையும், கட்டுப்பாடான ராணுவமும் அவருக்குத் துணையாக இருந்தன.



8. அப்சல்கானின் வீழ்ச்சி

பீஜப்பூர் சுல்தான் சிவாஜியின் வலிமையும் புகழும் வளருவதைக் கண்டு கிலி அடைந்தார். எவ்வாருவது சிவாஜியை ஒழித்துவிட வேண்டும் என்று அவர் முயன்றுகொண்டிருந்தார். அவர் தம் படைத் தலைவர்களை அழைத்து ஆலோசனை செய்தார்; எப்படியாவது சிவாஜியைக் கைது செய்துவிட வேண்டும் என்ருர் சுல்தான். சிவாஜியின் பெயரைக் கேட்டாலே படைத் தலைவர்கள் நடுங்கினுர்கள்; அவரை எதிர்க்கவோ, கைது செய்யவோ யாரும் முன்வரவில்லை. அப்சல்கான் என்ற படைத்தலைவன் மட்டும் வீருப்பாகப் பேசினுன்; சிவாஜியை உயிரோடோ, அல்லது பிணமாகவோ பிடித்து வருவதாக எல்லோருக்கும் முன்னுல் சூளுரைத்தான்.

அப்சல்கான் நல்ல பணக்காரன்; வீரத்தால் முன்னுக்கு வந்தவன்; ஆனுல், தந்திரசாலி. சிவாஜியை எதிர்ப்பதற்காகப் புறப்படுவதற்கு முன்னுல் அவனுக்கே அதைரியம் ஏற்பட்டது. தனக்குப் பிறகு தன்னுடைய நூற்று அறுபத்து மூன்று மனைவியரின் கதி என்ன ஆகுமோ என்ற கவலை எழுந்தது; அவனுக்கு அத்தனை மனைவிகள் இருந்தனர்! சிவாஜியை மாய்ப்பேன் என்று சூள் உரைத்தவனுக்குத் தன் உயிரைப் பற்றி அச்சம் எழுந்தது! அவன் தன் மனைவிகளை எல்லாம் படுகொலை செய்துவிட்டான்! தப்பித்தவறி அவன் போரில் இறந்துவிட்டால் அவர்கள் வீணுகத் துன்புறுவார்களே என்றுதான் அவன் இவ்வாறு செய்தான்!

அப்சல்கான் பெரும் படையோடு சிவாஜியின் ராச்சியத்தி லுள்ள ஆலயங்களை இடித்துக்கொண்டும், விக்கிரகங்களை உடைத்துக்கொண்டும் முன்னேறி 'பாயி' என்ற நகரத்தில் வந்து தங்கினுன்; அங்கு அவன் ஓர் இரும்புக்கூடு ஒன்று தயாரித்தான்; அதற்குள் சிவாஜியைப் பிடித்து அடைக்கப் போவதாக அறிவித்தான்.

சிவாஜி அந்த நகரத்துக்கு அருகிலேயே இருந்தார். அவர் ஜாவலிக் கோட்டைக்குச் சென்று போருக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். அப்சல்கான் ஒரு தூதனை அனுப்பிச் சிவாஜியைத் தம்மைச் சந்திக்க அழைத்தார். அவனுடைய இந்த அழைப்பில் இருந்த கபடத்தை ஒற்றர்கள் வாயிலாகச் சிவாஜி அறிந்துகொண்டார்.

"கான்சாகிப் என்னைச் சந்திக்க விரும்பினால், இங்கு வந்து என்னைச் சந்திக்கட்டும் ; அவருக்கு உபசாரம் செய்ய இங்கு வசதியாக இருக்கும். ஆனால், இங்கும் அவரை நான் தனியாகச் சந்திக்கிறேன் ; அவரும் தனியாக வர வேண்டும்" என்று மறுமொழி அனுப்பினர் சிவாஜி.

அப்சல்கான் அதற்கு உடன்பட்டான். பிரதாப்கட் கோட்டைக்கு அருகில் கூடாரம் அமைக்கப்பட்டது. சிவாஜி மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தார். தங்க வேலைப்பாடு செய்த அங்கியை அவர் மேலே போர்த்திருந்தார் ; ஆனால், அதற்குள் அவர் கவசம் அணிந்திருந்தார். தலைக்கு இரும்புத் தொப்பி பாதுகாப்பு அளித்தது ; அதற்கு மேல் தலைப்பாகை இருந்தது. கையில் அவர் புலி நகம் வைத்திருந்தார். மேலங்கியின் கீழ் ஒரு கட்டாரியும் இருந்தது. வெளித் தோற்றத்துக்கு நிராயுத பாணியாய்க் காட்சி அளித்த சிவாஜி உள்ளுக்குள் முற்றிலும் தயாராக இருந்தார்.

நான்கு பக்கங்களிலும் அப்சல்கானின் சிப்பாய்கள் இருந்தார்கள். அவனும் வாளோடு வந்திருந்தான். நிராயுதபாணியாக இருந்த சிவாஜியைக் கண்டதும் அவனுடைய உற்சாகம் அதிகமாயிற்று.

"நீ ஒரு சாதாரணக் குடியானவனுடைய பிள்ளை ; இவ்வளவு நேர்த்தியான கூடாரம் உனக்கு எப்படிக் கிடைத்தது ?" என்றான் அவன் செருக்குடன்.

"அதைப் பற்றி உனக்கு என் கவலை? நீ மணியக்காரர் மகன் தானே ? இதைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?" என்று சிவாஜி பதிலளித்தார்.

அதைக் கேட்டு அப்சல்கான் சீற்றத்துடன் பாய்ந்தான் ; வலுவான உடல் படைத்தவன் ; சிவாஜியை ஒரு கையால் பிடித்து

அமுக்கிக்கொண்டு மறுகையால் வாளைக்கொண்டு தாக்கினன். கவசம் அணிந்திருந்த சிவாஜியை வாளின் நுனி ஒன்றும் செய்யவில்லை. ஆனால், அவர் கையிலிருந்த புலி நகங்களைப் பிரித்தார். அவை அப்சல்கானின் வயிற்றில் புகுந்தன ; அவன் துடித்துக் கீழே விழுந்து செத்தான்.

இரு தரப்பு வீரர்களும் ஒருவரை ஒருவர் தாக்கத் தொடங்கினார்கள். தலைவனை இழந்த பீஜப்பூர் வீரர்கள் உற்சாகம் குன்றி விட்டார்கள் ; பலர் ஓடிவிட்டனர்; பலர் சிறைப்பட்டனர் ; வெற்றி சிவாஜிக்கே.

சிவாஜியின் தமயன் சாம்பாஜியை இந்த அப்சல்கான்தான் கொலை செய்தான் ; அதற்குச் சிவாஜி பழி வாங்கிவிட்டார். அவருடைய அன்னை பெரிதும் மகிழ்ச்சி கொண்டாள் ; மைந்தனை மார்புறத் தழுவி வாழ்த்தினாள். இந்த வெற்றியினால், ஏராளமான பொருள்களும் கிடைத்தன. பணத்தைப் போர் வீரர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார் ; காயமுற்றவர்களுக்குப் பென்ஷன் வழங்கினார். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கும் பணவுதவி புரிந்தார்.

இந்த வெற்றியினால் சிவாஜியின் புகழ் பாரத நாடெங்கும் பரவியது. வெகு நாட்கள் வரை ராச்சியத்தில் வெற்றியைக் கொண்டாடினார்கள்.

9. தந்தை மறைந்தார்

அப்சல்கான் பட்டான் என்ற செய்தி பீஜப்பூருக்குத் தெரிய எவ்வளவு நேரம் ஆகப் போகிறது ? ராச்சியத்தைச் சோகம் கப்பிக் கொண்டது. சிவாஜி அப்சல்கானைக் கொன்றதோடு அமைந்து விடவில்லை ; மேலும் மேலும் பீஜப்பூருக்குச் சொந்தமான கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டே இருந்தார் ; பீஜப்பூர் நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டிருந்தது !

பிறகு அவர் கடற்கரை நகரங்களைத் தாக்கிப் போர்த்துக்கீசியர்கள், ஆங்கிலேயர்களின் கிடங்குகளைக் கொள்ளை யிட்டார். ஓரிடத்தில் இரண்டு ஆங்கில வியாபாரிகளைக் கைது செய்தார்.

பீஜப்பூர் சுல்தான் முற்றிலும் பொறுமை இழந்தார். அக்கம்பக்கமிருந்த சில ஹிந்து அரசர்களையும் சிவாஜிக்கு விரோதமாகத் தூண்டிவிட்டார். நாலாபக்கங்களிலும் அவரைத் தாக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. ஆனால், சிவாஜி அச்சம் என்பதை அறியாதவராயிற்றே !

அவர் தம் படைத் தலைவர்களை ஒவ்வொரு முனைக்கும் படை யுடன் அனுப்பினார். நான்கு போர் முனைகளிலும் மிகவும் கடுமையாகப் போர் நிகழ்ந்தது. ஆங்கிலேயர்கள் அப்போதும் ஒரு போர் முனையில் சிவாஜிக்கு எதிராகப் போரிட்டனர். அவர் களில் பலரை அவர் கைது செய்தார். பீஜப்பூர் படையோடு அதற்கு உதவி புரிய வந்த ஹிந்து அரசர்களின் படைகளும் புறமுதுகு காட்டி ஓடலாயின ; பகைவர்களுக்கு உதவிய போர்த்துக் கீசியர்களும் தங்களுடைய துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் போட்டுவிட்டு ஓடிப் போயினர்.

பீஜப்பூர் சுல்தான் தலை நிமிர முடியாமல் சோர்ந்துவிட்டார். சிவாஜியை வெல்ல முடியாது என்பதை! அறிந்த ஆதில்ஷா

அவரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பினர். அதற்கு அவர் ஷாஜியைத் தூதராக அனுப்பினர். சிவாஜிக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏழு லட்சம் கப்பம் செலுத்தப் பீஜப்பூர் இணங்கியது; கல்யாணிலிருந்து கோவா வரை உள்ள நிலப் பரப்பை சிவாஜிக்கு அளிக்கவும் உடன்பட்டது.

சமாதானப் பேச்சுக்கள் நடத்த ஷாஜி சிவாஜியைச் சந்திக்க வந்தார்; தகப்பனரைப் பார்த்ததும் சிவாஜியின் கண்களில் ஆனந்தம் ஒளிர்ந்தது. ஷாஜி பல்லக்கில் ஏறி மகனுடைய விடுதிக்கு வந்துகொண்டிருந்தார். தந்தையின் கால்களைத் தழுவிக் கண்ணீரால் கழுவினர் சிவாஜி. அவர் குதிரை மீதோ, பல்லக்கிலோ ஏறவில்லை. தந்தையாரின் பல்லக்கின் ஒரு காலைப் பற்றிக்கொண்டு மற்றொரு கையில் அவருடைய செருப்புகளை ஏந்திக்கொண்டு கால் நடையாகவே சென்றார். இரு கரங்களையும் குவித்து அவர் தம் குற்றங்களுக்காக மன்னிப்புக் கோரினர்.

"சிவா, நம் குலப் பெருமையை நீ உயர்த்திவிட்டாய். உன் தகப்பனர் என்று சொல்லிக்கொள்ள நான் பெருமைப் படுகிறேன்" என்று ஷாஜி மகனைப் பாராட்டினர்; ஆசி கூறினர்.

"நீ ஹிந்து ராச்சியத்தை நிறுவிவிட்டால் பவானி தேவிக்கு ஒரு லட்சம் ரூபா எடையுள்ள தங்கத்தைப் பவானிக்குக் காணிக்கை செலுத்துவதாக நான் நேர்ந்துகொண்டேன், சிவா!" என்ற பெரியவர் அவ்வாறு செய்தார்.

ஷாஜியை சிவாஜி வேண்டிக்கொண்டார்: "அப்பா, இந்த ராச்சியம் உங்களுடையது, ஏற்றுக்கொள்ளுங்கள். இனியும் நீங்கள் பீஜப்பூரில் இருக்கத் தேவை இல்லை."

ஷாஜி சம்மதிக்கவில்லை; சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதும் அவர் பீஜப்பூருக்குத் திரும்பிவிட்டார். கொஞ்ச காலம் கழித்து, வேட்டையாடும் போது குதிரையிலிருந்து விழுந்து அவர் இறந்துவிட்டார். சிவாஜி மிகவும் துயரமடைந்தார். இறுதிச் சடங்குகளுக்காக அவர் லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தார். ஷாஜி இறந்த இடத்தில் ஒரு சமாதிக் கோவிலைக் கட்டினர். இன்றும் அதன் இடிபாடுகள் அங்கு உள்ளன.

10. திருமண ஊர்வலம்

பீஜப்பூர் ஒரு வழியாக ஒடுங்கிவிட்டது; இனி முகலாயர்களோடு பலப் பரீட்சை நடத்திப் பார்க்க வேண்டும் என்று சிவாஜிக்குத் தோன்றியது. தந்தையாரைச் சிறையிலிருந்து மீட்க அவர் முன்னொரு முறை டில்லி பாதுஷா ஷாஜஹானின் உதவியை நாடினார். இப்போது நிலைமை வேறு. அவுரங்கசீப்பின் கொடுங்கோல் ஆட்சி நடந்துகொண்டிருந்தது; அவன் தன் தந்தையைச் சிறையில் பூட்டிவிட்டான்; சகோதரர்களோடு போராடிக்கொண்டிருந்தான். அவன் சிவாஜிக்குக் கடிதம் எழுதி உதவி கோரினான். ஆனால் சிவாஜி அக் கடிதத்துக்குப் பதில் எழுதவில்லை. அவர் அவுரங்கசீப்பின் அநீதியை விரும்பவில்லை. அவுரங்கசீப்பின் கடிதத்தை ஒரு நாயின் கழுத்தில் கட்டி ஊர்வலம் விட்டார்!

சகோதரர்களைக் கொன்று தீர்த்துவிட்டு அவுரங்கசீப் பாதுஷா ஆனான். தென் ராச்சியங்களின் ஆட்சிப் பொறுப்பை அவன் இளவரசன் முஅஜ்ஜமிடம் ஒப்படைத்தான். அவனுக்குச் சிவாஜியின் ஆற்றல் தெரியும்; அவன் ஒரு நாளும் அவர் கண்ணெதிரில் படவில்லை. ஆனால், அவனுடைய இடத்தில் ஷெயிஸ்டகானை நியமித்ததும் மகாராஷ்டிரர்களுடன் மோதல் ஏற்பட்டது.

ஷெயிஸ்டகான் கல்யாண் கோட்டையைக் கைப்பற்றினான்; சிவாஜி அவனுடைய பிரபல்கட்டைப் பிடித்தான். இவ்வாறு போர் மூண்டது. அவுரங்கசீப் 'ஷெயிஸ்டகானைப் பழித்தான். முப்பத்திரண்டு கோடி ரூபாய் ரொக்கம், லட்சம் வீரர்கள் அடங்கிய படை, எழுநூறு யானைகள், நாலாயிரம் ஒட்டகங்கள், மூவாயிரம் மாட்டு வண்டிகள் ஷெயிஸ்டகானிடம் தயாராக இருந்தன!

'இவ்வளவு இருந்தும் உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே !,' என்று பாதுஷா ஏசினால், அது நியாயம்தானே? மகாராஷ்டிரர்களை நிர்மூலம் செய்ய வேண்டும் என்று அவுரங்கசீப் ஆணையிட்டான்.

ஷெயிஸ்டகான் பூனாவைப் பிடித்துக்கொண்டு, அரண்மனையில் வசிக்கத் தொடங்கினான். அவன் ஆற்றலும் அறிவும் மிக்கவன். தெற்கில் ஜோத்பூர் மன்னர் யசுவந்த சிங்கைப் பதினாயிரம் வீரர்களோடு நிறுத்தி இருந்தான் ; அந்தப் பக்கத்தில் தான் சிவாஜியின் சிம்மகட் கோட்டை இருந்தது ; அங்கிருந்து தாக்குதல் ஆரம்பமாகலாம் என்று ஷெயிஸ்டகான் எண்ணினான். பூனாவின் நான்கு திசைகளிலும் ராணுவக் காவல் பலமாக இருந்தது. உத்தரவு இல்லாமல் நகரத்துக்குள்ளோ வெளியோ யாரும் போக முடியாது.

கி. பி. 1663-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் ஐந்தாம் நாள் இரவு. ஒரு திருமண ஊர்வலம் பூனாவுக்குள் ஆரவாரத்துடன் புகுந்தது. ஊர்வலத்துக்கு ஏற்கனவே அதிகாரிகளிடம் அனுமதி வாங்கியாகி விட்டது. தடபுடலாக வந்த ஊர்வலம் நகரின் நடுவே சென்றது. இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் எல்லோரும் மராட்டிய வீரார்கள் ; சிவாஜியும் அதில் இருந்தார் !

சிவாஜியின் வீரர்கள் முகலாய வீரர்களாக மாறினார்கள் ; அவர்கள் சில மராட்ட வீரர்களைப் பிடித்துக்கொண்டு கூச்சல் போட்டார்கள் : "இவர்கள் போர்க் கைதிகள் ; இவர்கள் எங்களை அடித்துவிட்டார்கள் !"

சில வீரர்கள் ஆங்காங்கு ஒளிந்துகொண்டார்கள் ; ஊது குழல் சத்தம் கேட்டதும் அவர்கள் வெளியில் வந்து போரிட வேண்டும் என்று அவர்களுக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

நகரத்துக்குள் புகுந்த சிவாஜி தம்முடைய சிறந்த வீரர்களுடன் பின் வழியாக அரண்மனையில் நுழைந்தார். குழந்தைப் பருவத்தை இன்பமாய்க் கழிக்க அவருக்குப் பயன்பட்ட அரண்மனை அல்லவா அது ! மூலை முடுக்குகளும் அவருக்குத் தெரியும் ; ஆகையால் அவர் அதில் சுலபமாக ஒளிந்துகொண்டு செல்ல முடிந்தது.

ஷெயிஸ்டகான் என்று எண்ணி அவர், அவனுடைய மகனைத் தீர்த்துவிட்டார். பிறகு ஷெயிஸ்டகானின் மனைவியிடம் சென்று

அவன் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டார். ஷெயிஸ்டகானை வெட்டப் போகும்போது, மனைவி காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். வேண்டுகோளுக்குச் சிவாஜி இணங்கினர். ஷெயிஸ்டகானின் கைவிரல் ஒன்றை வெட்டிவிட்டு, "நாளைக்கே அரண்மனையைக் காலி செய்யாவிட்டால், உன் உயிரை வாங்கி விடுவேன்," என்று எச்சரித்தார்.

அரண்மனைக்கு வெளியில் சிவாஜியின் படைத்தலைவன் ஒருவன் சில வீரர்களுடன் இருந்தான்; அரண்மனைக் காவற்காரர்களிடம், 'இப்படியா தூங்கிவழிந்துகொண்டே காவல் காப்பார்கள்?' என்று சொல்லிய வண்ணம் அவர்களை அடித்துக் கொன்றார்கள். சில மராட்ட வீரர்கள் முரசறைவோரிடம் சென்று, "முரசு அடியுங்கள்! படைத்தலைவரின் கட்டளை!" என்று கத்தினர்கள். முரசங்கள் முழங்கின. அரண்மனையில் பெண்களின் கூச்சல். காவற்காரர்களின் அலறல், முரசுச் சத்தம் யாவும் சேர்ந்து பூனுவில் ஒரே சந்தடியும் குழப்பமும் உண்டாயின. அதைப் பயன்படுத்திக்கொண்டு சிவாஜி பூனுவிலிருந்து வெளியேறினர்.

11. கூடையா வெளியேறியது?

முகலாயர்கள் மீண்டும் தாக்குவார்கள் என்று சிவாஜிக்குத் தெரியும். அவர் முன் ஜாக்கிரதையாக இருக்க விரும்பினார். அக்காலத்தில், சூரத் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாகத் திகழ்ந்தது. ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் அந்த நகரத்திலிருந்து தொழில் செய்தனர்; அதனால் சூரத்தில் செல்வம் மிக்க வர்த்தகர்கள் பலர் இருந்தனர். சிவாஜி அந்நகரத்தின்மீது படையெடுத்தார்; எட்டரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து அவுரங்காபாதையும், அகமது நகரையும் தாக்கிக் கொள்ளையிட்டார். அப்பால் மூன்று கப்பல்களோடும் இருபத்தைந்து படகுகளோடும் பார்சிலோர்மீது படையெடுத்தார். அங்கும் அவருக்கு ஏராளமான செல்வம் சிக்கியது.

ஜயசிம்மனோடு சேர்ந்து சிவாஜி பீஜப்பூர்மீது போர் தொடுத்தார். பீஜப்பூர் பணிந்தது. சிவாஜியின் பலம் அதிகரிப்பதைக் கண்ட ஜயசிம்மன் பொறுமை கொண்டான். 'இவரை முகலாயர்களோடு மோதிக்கொள்ள வழிசெய்ய வேண்டும்,' என்று கருதிய ஜயசிம்மன், அவுரங்கசீப்புக்குக் கடிதம் எழுதினான். "பீஜப்பூர் சுல்தானும், கோல்கொண்டா சுல்தானும் ஒன்றுபட்டுவிட்டார்கள்; நீங்கள் சிவாஜியோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும். சிவாஜியை நேரில் கண்டு பேசுங்கள்," என்று பொருள்பட அவன் அவரங்கசீப்புக்கு எழுதினான்; அதன்படி பாதுஷா சிவாஜியைச் சந்திக்க விரும்பினான்.

பிறகு, ஜயசிம்மன் சிவாஜிக்கும் எழுதினான்; சிவாஜியும் பாதுஷாவைக் காண இசைந்தார். தம் புதல்வன் சாம்பாஜியையும் பத்துப் படைத் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு அவர் பாதுஷாவிடம் போய்ச் சேர்ந்தார்; நம்பித்தான் அவர் சென்றார்;

ஆனல், அவுரங்கசீப் நயவஞ்சகமாக அவரைக் கைது செய்ய எண்ணிவிட்டான்; போரால் முடியாததை வஞ்சனையால் சாதிக்க எண்ணினன் அவன்.

சிவாஜிக்கு மிகவும் எளிய வரவேற்பு அளித்தான் அவுரங்கசீப். மராட்ட வீரர் பல மணி மாணிக்கங்களைப் பரிசாக அளித்தார்; ஆனல், பாதுஷாவின் முகத்தைப் பார்த்ததும் அவனுடைய சூழ்ச்சியைப் புரிந்துகொண்டார்: 'ஏமாந்தோம்!' என்று உள்ளுணர்வு அவருக்கு உணர்த்தியது.

ஓர் ஆசனத்தைக் காட்டி அதில் உட்காரும்படி அவுரங்கசீப் சிவாஜியை வேண்டிக்கொண்டான். துரோகி ஜயசிம்மனின் மகன் ராமசிம்மன் அவையில் இருந்தான்; அவனை நோக்கி சிவாஜி கேட்டார்: "இது யாருடைய ஆசனம்?"

"ஐயாயிரம் வீரர்களுள்ள மன்சப்தார்களுக்கு," என்று ராமசிம்மன் பதில் கூறினன்.

அதற்கு மேலும் சிவாஜியால் பொறுக்க முடியவில்லை. இந்த அவமதிப்பை ஏற்க அவர் மனம் உடன்படவில்லை. நிராயுதபாணியாக இருந்த அவர் நின்றவாறே ஜயசிம்மனை ஏசினர்; அவைக்கு அழைத்து அவமதித்த பாதுஷாவைப் பழித்தார். அவர் பாய்ந்து சென்று ராமசிம்மனின் வாளை உருவி எடுக்க முயன்றார்; ஆனல், அவன் வாளைத் தரவில்லை; குறுவாளால் தம் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார்; உடன்வந்த நண்பர்கள் அவரைத் தடுத்தார்கள். சினத்தாலும் அவமானத்தாலும் ஒடுங்கிய அவர் உணர்விழந்து கீழே விழுந்தார்.

கண் விழித்தபோது, தாஜ்மகாலுக்கு அருகே உள்ள ஒரு மாளிகையில் தாம் சிறைப்பட்டிருப்பதை சிவாஜி அறிந்தார். அச்சிறையை ஐயாயிரம் வீரர்கள் சூழ்ந்துகொண்டு காவல் காத்தனர்.

ஏமாற்றப்பட்டதை எண்ணிக் குமுறினர் சிவாஜி; ஏமாற்றிவிட்டு வெளியேற வழி என்ன என்று சிந்திக்கலானர். சமயப்பற்று மிகுதியாக உடைய அவர் வியாழன்தோறும் விரதம் காக்கத் தொடங்கினர். அன்று தானம் செய்தார்; பிராமணர்களுக்கு உணவிட்டார். மிட்டாய்களைக் கூடை கூடையாக முகலாய அரசவையினருக்கும் அனுப்பினர்; இரவும் பகலும் பழக்கூடைகள்

வந்த வண்ணம் இருந்தன. ‘இனி நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன்,’ என்று கூறி நண்பர்களை எல்லாம் அனுப்பி விட்டார்; அவருடைய புத்திரர் சாம்பாஜியும் ஹீராபர்ஜந்த் என்ற சகோதரரும் மட்டும் (சிற்றன்னையின் மகன்) அவரோடு இருந்தனர். இந்த ஏற்பாடுகளைக் கேட்ட அவுரங்கசீப், சிவாஜி அங்கேயே தங்கிவிட முடிவு செய்துவிட்டதாக முடிவு செய்தான்.

சில நாட்கள் சென்றன. சிவாஜி கடுமையாக நோய்வாய்ப் பட்டுள்ளதாகச் செய்திகள் பரவின. நாள்தோறும் மருத்துவர் கள் வந்து அவருக்குச் சிகிச்சை செய்தனர். சிவாஜியின் வேண்டுகோள்படி தானங்கள் மிகுதியாக நடந்தன; மிட்டாய், பழக்கூடைகள் ஏராளமாக வந்தன. ‘சிவாஜிக்கு வியாதி முற்றி விட்டது; அவர் யாரையும் பார்ப்பதுகூட இல்லை,’ என்ற வதந்தி பரவியது.

“என்னால் உட்காரவும் முடியவில்லை; யாரையும் என்னிடம் அனுப்பவேண்டாம்; என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்,” என்று சிவாஜி காவற்காரர்களிடம் கூறிவிட்டார்.

அன்று இரவு அவர் ஹீராஜிபர்ஜந்தைத் தம் கட்டில்மீது படுக்கவைத்தார்; அவனுடைய வலக்கை விரலில் தம் மோதிரத் தைப் போட்டார்; அவனுடைய உடம்பு முழுவதையும் போர்த்தி விட்டு, மோதிரக்கை மட்டும் வெளியில் தெரியும்படி வைத்தார்.

மாலை ஆயிற்று. மதுராபுரிக்கு அனுப்ப ஐந்து கூடைகளில் பழங்களையும் மிட்டாய்களையும் நிரப்பினார்கள். ஒரு கூடையில் சிவாஜியும் மற்றொன்றில் சாம்பாஜியும் உட்கார்ந்துகொண்டார்கள். விரத நாட்களில் பெரிய பெரிய கூடைகள் வருவதும் போவதுமாக இருக்கும்; இரண்டு ஆட்கள் தூக்கிச் செல்லும்படியான கனமான கூடைகளும் இருக்கும்; ஆகையால் கூடைகளோடு, சிவாஜியும் சாம்பாஜியும் வெளியேறியதை யாரும் கவனிக்கவில்லை; காவற்காரர் கள் கூடைகள் போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்!

மறுநாள் பிற்பகல்வரை ஹீராஜி போர்வைக்குள்ளேயே இருந் தான்; பிறகு அவனும் எழுந்து, ‘வைத்தியரை அழைத்து வரு கிறேன்,’ என்று காவற்காரர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான்!

காவற்காரர்கள் அவ்வப்போது எட்டிப் பார்த்தார்கள்; ஹிராஜி போர்வைக்குள் இருந்ததைக் கண்டு சிவாஜி என்று எண்ணியிருந்தார்கள் ; ஹிராஜி தப்பிப்போய் நீண்ட நேரம் கழிந்த பிறகுதான் அவர்களுக்கு உண்மை தெரிந்தது.

கூடைகள் ஆக்ரா நகருக்கு வெளியில் வந்தன. கூடைக்காரர்கள் கூலி பெற்றுக்கொண்டு திரும்பினுர்கள். சிவாஜியும் சாம்பாஜியும் கூடைகளிலிருந்து வெளியே வந்தார்கள். ஆறு மைல்களுக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்துக்குப் போனுர்கள். அவர்களுக்காகக் குதிரைகளுடன் ஒரு பணியாள் காத்திருந்தான். சிவாஜியும் சாம்பாஜியும் தாடி மீசையை மழித்துவிட்டுச் சாதுக்களைப் போல் வேடம் தரித்துக்கொண்டார்கள்; நண்பர்கள் சிலரும் அங்கு வந்து சேர்ந்துகொண்டார்கள். எல்லோரும் மதுராபுரிக்குப் போனுர்கள். பிரயாகை, காசி, கயை, பூரி வழியாகத் தெற்கே சென்றுர்கள்.

12. கோட்டை வந்தது, சிங்கம் போயிற்று !

அவுரங்கசீபை இவ்வாறு பழி வாங்கிய சிவாஜி பிரதாப் கட் கோட்டையில் வசிக்கலானர். பிரதாப்கட் கோட்டையிலிருந்து பார்த்தால் சிம்மகட் கோட்டை தென்படும். ஒரு நாள் அன்னை ஜீஜா, சிவாஜியை அழைத்தாள் : "சிவா, நம் அரசாட்சியின் எல்லைக்குள்ளேயே முகலாயர்களின் இந்தக் கோட்டை இன்னும் நிமிர்ந்து நிற்கிறது. இதை உடனே நீ கைப்பற்ற வேண்டும் !" என்று பணித்தாள்.

அக்கோட்டையை வெல்லுவது கடினம் என்று சிவாஜி உரைத்தார்; "அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை !" என்ருள் தாய். அவளுடைய ஆணையை மீற அவர் மனம் ஒப்பவில்லை. சிம்மக் கோட்டையை முறியடிப்பதற்கான பொறுப்பை ஏற்கப் படைத் தலைவர்கள் யாரும் துணியவில்லை. இந்த ஆலோசனை நடந்த அன்று தானுஜி அவைக்கு வரவில்லை ; சிவாஜியின் அடிநாள் நண்பர் அவர் ; பெரிய படைத்தலைவர் ; அவர் தம் மகனுடைய திருமண வேலைகளில் முனைந்திருந்தார். மறுநாள் அவர் சிவாஜியைச் சந்தித்தார்.

தாயாரின் பிடிவாதத்தைத் தானுஜியிடம் கூறினர் சிவாஜி. தானுஜி, ஜீஜாபாயைச் சொந்த அன்னையைப் போலவே நேசித்தவர் ; அவர் அவளோடும் பேசினர். "நான் சிம்மக் கோட்டையைக் கைப்பற்றி உங்களிடம் தருகிறேன்" என்று உறுதியளித்த தானுஜி, மகனின் மணத்தையும் பொருட்படுத்தாமல் படையுடன் சிம்மக் கோட்டையை நோக்கி முன்னேறினர்.

இரு தரப்பினரும் பயங்கரமாகப் போரிட்டனர். சிம்மக் கோட்டை வீழ்ந்தது ; ஆனல், தானுஜி கொல்லப்பட்டார். மறு நாள் சிவாஜி சிம்மக் கோட்டைக்கு விஜயம் செய்தார் ; நண்பரின்

சவத்தைப் பார்த்துப் பெருந்துயரம் அடைந்தார் : "கோட்டை வந்தது ; ஆனால், சிம்மம் போய்விட்டதே !" என்றார் கண்ணீர் சிந்தியபடி.

இவ்வாறு, முந்நூறுக்கும் மேற்பட்ட கோட்டைகள் சிவாஜி யின் ஆட்சிக்குள் வந்துவிட்டன. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஒரு கோடி ரூபாய் வரி வருமானம் கிடைத்தது. படைத்தலைவர்களும், குடிகளும் அவர் 'மகாராஜா'வாக முடி சூட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அவ்வாறே, தர்பார் நடந்தது ; அவர் 'சத்திரபதி' என்று முடிசூட்டப் பெற்றார். இந்த மகுடாபிஷேகம் மிகவும் ஆடம்பரமாக நடந்தது. மாதக் கணக்கில் கேளிக்கைகள் நடந்தன. தானங்களும், பிராமண போஜனமும் நடத்தினார்கள்.

சிவாஜிக்கு மகுடாபிஷேகமான பத்தாம் நாள் தாயார் ஜீஜாபாய் காலமானாள் ; தாய்ப் பாசம் மிக்க சிவாஜி மிகவும் துக்கமுற்றார்.

ஹிந்து ராச்சியத்தை நிறுவ வேண்டும் என்ற அவருடைய கனவு நிறைவேறிவிட்டது. ஹிந்து மதத்தினருக்கு ஏற்பட்ட இழிவை அவர் அகற்றிவிட்டார். வீரம் மிக்க மராட்டர்கள் இன்றும் அவரைக் கடவுளே போலப் போற்றுகிறார்கள். அவர்கள் ஒன்றுபட்டு அவருக்குத் துணை நின்றதாலேயே அவரால் இந்தப் பெரும் சாதனையைச் செய்ய முடிந்தது. சிவாஜியிடம் காலாட்படை மட்டும் அல்ல, வலிமை மிக்க கடற்படையும் இருந்தது ; பல முறை அவர் ஆங்கிலேயர்களையும் போர்த்துக்கீசியர்களையும் முறி யடித்தார்.

இவ்வாறு மாவீரராய் வாழ்ந்த சிவாஜி கி. பி. 1680-ஆம் ஆண்டு வீர சொர்க்கம் எய்தினார்.

13. சிவாஜியின் ஆசிரியர்

சிவாஜி ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர்; பவானி மாதாவைத் தொழுதுகொண்டுதான் அவர் எந்தக் காரியத்தையும் தொடங்குவது வழக்கம். இந்த நம்பிக்கை அவரை ஈன்ற அன்னையின் வாயிலாக அவருக்கு ஏற்பட்டது என்பது மெய்; இந்த நம்பிக்கையை மேலும் வளர்த்தவர் சுவாமி ராமதாசர் என்கிற துறவி.

ராமதாசர் மகாராஷ்டிரத்தில் மிகவும் புகழ் பெற்றவர். அவருடைய பாடல்களும், அறிவுரைகளும் ஒலிக்காத வீடே மகாராஷ்டிரத்தில் இல்லை. கி.பி. 1608-ஆம் ஆண்டில் தோன்றிய இத் துறவி சிவாஜி காலமான பின் 1681-ஆம் ஆண்டு மறைந்தார். அவர் தெய்வ நெறியை மட்டும் போதிக்கவில்லை; மக்களுக்கு வீர நெறியையும் புகட்டினர். நாட்டையும் சமயத்தையும் காப்பாற்ற வலிமை இல்லாதவன் ஆண்டவனை அடைய முடியாது என்று அவர் கருதினர். ஆகையால் அவர், மக்கள் வீரர்களாக விளங்க வேண்டும் என்று போதித்தார்.

சிவாஜி அளவு கடந்த குருபக்தி கொண்டவர். அவர் 1673–ஆம் ஆண்டு சதாரா கோட்டையைக் கைப்பற்றினர்; அதற்கு நான்கு மைல் தொலைவிலுள்ள பாரலிக் கோட்டையும் அவரிடம் வீழ்ந்தது. இந்தப் பாரலிக் கோட்டைக்கு சஜ்ஜன்கட் (துறவிக் கோட்டை) என்று புதுப் பெயரிட்டார். அங்கு தம் குருநாதருக்காக ஓர் ஆசிரமம் நிறுவினர். ராமதாசர் அங்கு வசிக்கலானர்; அவருக்காகக் கோயில், மடம் முதலியவற்றை சிவாஜி கட்டிக் கொடுத்தார். துறவிகளுக்கும் பக்தர்களுக்கும் உணவுக் கஷ்டம் ஏற்படாமல் இருக்கப் பக்கத்துக் கிராமங்களை மானியமாக வழங்கினர்.

எல்லா வித வசதிகள் இருந்தும் ராமதாசர் மற்ற துறவிகளைப் போலவே பிச்சை எடுக்கச் செல்வது வழக்கம். இதனால் சிவாஜி மிகவும் வருத்தம் அடைந்தார். 'குருதேவருக்கு நாம் இவ்வளவு பொன்னும் பொருளும் கொடுத்தும், அவர் ஏன் பிச்சையெடுக்கிறார்? அவருடைய மனவேட்கையே தணியாதா?' என்று எண்ணினார் அவர்.

மறுநாள், தன் ராச்சியம் முழுவதையும் ராமதாசருக்குத் தானம் செய்வதாய்ப் பத்திரம் எழுதினார் சிவாஜி. ராஜமுத்திரையையும் வைத்தார். குருநாதரின் திருவடிகளில் அந்தப் பத்திரத்தைக் காணிக்கையாக வைத்தார்.

ராமதாசர் பத்திரத்தைப் படித்துவிட்டுப் புன்னகை புரிந்தார்; "ராச்சியத்தை ஏற்றுக்கொண்டோம்; மகிழ்ச்சி. இன்றுமுதல் நீ என் குமாஸ்தா. உன் விருப்பம் போல் இன்பம் நுகர இந்த ராச்சியத்தை நீ பயன்படுத்தக் கூடாது. உனக்கு மேல் ஒரு எஜமானர் இருக்கிறார். அவருக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற கடமையுணர்ச்சியுடன் ஆட்சி புரி!" என்று கட்டளை இட்டார்.

நாட்டின் அதிபர் துறவி என்பதால்தான், சிவாஜியின் கொடி, காவிக்கொடி ஆயிற்று. ராமதாசரைக் கலந்துகொள்ளாமல் சிவாஜி எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. சிவாஜி ஹிந்து சமயத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை ஏற்றதற்குக் காரணம், ராமதாசரின் தூண்டுதலே.

இந்த வீரத்துறவி 1608-ஆம் ஆண்டு தோன்றியவர். பெற்றோர் அவருக்கு நாராயணன் என்று பெயரிட்டனர். குழந்தைப் பருவத்திலிருந்தே அவருக்குத் தெய்வபக்தி மிகுதி. பதினோராம் வயதில் அவருக்குத் திருமணம் செய்ய விரும்பினாள் பெற்றவள். தாயின் கட்டாயத்துக்குப் பணிந்தார்; ஆனால், திருமண மண்டபத்திலிருந்து ஓடிவிட்டார்.

பிறகு, நாசிக் நகருக்கு அருகில், கோதாவரி ஆற்றின் கரையில் ஓர் ஆசிரமத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் கல்வி பயின்றார். துறவியாகத் தீட்சை பெற்ற அவர் 'ராமதாசர்' என்ற துறவுப் பெயர் பூண்டார். ஆஞ்சனேயரே ராமதாசராக அவதரித்ததாக மகாராஷ்டிரர்கள் இன்றும் நம்புகிறார்கள். ராமதாசரும் ராமபிரானையே வழிபட்டார், மாருதியைப்போல்.

துறவியான பின் பன்னிரண்டு ஆண்டுகள் பாரத நாடெங்கும் சுற்றினார் அவர். 'உலகத்தில் ஒரு புதிய பக்தர் குழுவை உண்டாக்கு!' என்று ராமச்சந்திரமூர்த்தி அவருக்குக் கட்டளை இட்டதாய்க் கூறுகிறார்கள். யாத்திரையை முடித்துக்கொண்டு தாய்நாட்டுக்குத் திரும்பிய ராமதாசர், சதாரா மாவட்டத்தில் சாபல் என்னும் கிராமத்தில் குடிசை கட்டிக்கொண்டு வாழத் தொடங்கினார். தம் கொள்கைகளை ஏற்ற துறவிகளைச் சேர்த்து, 'ராமதாஸி' என்ற புதிய குழுவை உருவாக்கினார். பலர், சீடர்களாகினர். பல இடங்களில் மடங்கள் கட்டப்பட்டன. இவ்வாறு பத்து ஆண்டுகள் கழிந்தன.

பிறகு அவர் பத்து ஆண்டுகள் ஒரு கிராமத்தில் தனிமையாகக் காலம் கழித்தார். சமய நூல்களைப் படிப்பதும் சிந்தனை செய்வதுமாக இருந்தார். தம்முடைய சமயக்கொள்கைகளை வகைப்படுத்தி 'தாசபோதம்' என்னும் நூலை இயற்றினார். வடமொழியிலும், மராட்டி மொழியிலும் புலமை மிக்க அவருடைய இந்த நூலை மகாராஷ்டிரர்கள் மிகவும் போற்றுகிறார்கள்.

ராமதாசரின் மகிமையைக் கேள்விப்பட்ட சிவாஜி அவரிடம் ராம நாம மந்திரத்தை உபதேசமாய்ப் பெற்றார். அத்துறவியின் திருவுருவம் வீரரைப் பெரிதும் கவர்ந்தது. "நான் உங்களுடைய திருவடிகளுக்கு அருகில் என்றும் இருக்க விரும்புகிறேன்," என்றார் பரவசத்துடன்.

துறவி கூறினார்: "இதற்காகத்தான் நீ என்னிடம் வந்தாயா? நீ கர்மவீரன்; நாட்டையும் மக்களையும் ஆபத்திலிருந்து காப்பாற்றக் கடமைப்பட்டவன். நீ செய்யவேண்டிய காரியங்கள் பல உள்ளன. நாட்டை மிலேச்சர்கள் வசப்படுத்திக்கொண்டுவிட்டார்கள். அவர்களிடமிருந்து நாட்டை மீட்க வேண்டும். ராமபிரானின் விருப்பம் இதுதான். பகவத்கீதையில் கண்ணபெருமான் அருச்சுனனுக்கு உபதேசித்ததை மறந்துவிடாதே; போர் வீரரின் கடமை வழியே செல்; கர்மயோகத்தைப் பயில்."

சிவாஜி சிறந்த கர்மயோகி என்று ராமதாசர் அடிக்கடி பாராட்டுவார். அவர் சிவாஜி மன்னருக்குக் கவிதை வடிவில் எழுதிய ஒரு கடிதம் மிகவும் பிரபலமானது. அக்கடிதத்தில் குரு, அரசருக்கு எழுதுகிறார்: "உறுதியில் மகா மேரு போன்றவரே, பரோபகாரியே,

பிரதிக்ஞையைக் காப்பாற்றுகிறவரே, புலன்களை வென்றவரே, கொடை வள்ளலே, குணக்கடலே, மக்கள் தலைவ, பரிகளின் தலைவ, யானைகளின் தலைவ, கடலையும் நிலத்தையும் ஆளுபவ என்றும், வெற்றி வீர, தர்ம வீரரே, உலகம் புரண்டுகொண்டிருக்கிறது. பசுக்களையும் தேவதைகளையும் அறத்தையும் காக்க நாராயணன் உங்களை அனுப்பியிருக்கிறார். அறத்தை நிலை நாட்டி இறவாப் புகழ் பெறுவீராக !''

வயதான காலத்திலும் சிவாஜி ராமதாசரிடம் அரசாங்க அலுவல்களுக்கான ஆலோசனைகளைக் கேட்டார். பக்தி யோகமும் கர்ம யோகமும் ராமதாசரின் உபதேசங்களில் மிக அருமையாக ஒன்று சேருகின்றன. அவர் சிவாஜியை வீர புருஷராக வாழத் தூண்டினார் என்பது உண்மை; ஆனால், அவர் அரசியலில் நேரிடையாகப் பங்குகொண்டதில்லை ; பங்குகொள்ள விரும்பியது மில்லை.

14. சிவாஜியும் ஔரங்கசீப்பும்

சிவாஜியின் புகழ் பாரத நாடெங்கும் பரவியிருந்தது. வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த ஔரங்கசீப் படை வலிமை மிக்கவர்; பொருள் வலிமை மிகுந்தவர். ஆயினும் பீஜப்பூரைச் சேர்ந்த ஒரு சாதாரண ஜாகீர்தாரரின் புதல்வரான சிவாஜியை அவரால் அடக்க முடியவில்லை.

ஔரங்கசீப்பின் தர்பாரில் தென் இந்தியாவைப் பற்றின செய்திகள் அவ்வப்போது படித்துக் காட்டப்படும். 'இன்று சிவாஜி இன்ன இடத்தைக் கொள்ளையிட்டார்','நேற்று முகலாயப் படைத்தலைவர் சிவாஜியிடம் தோற்றார்,' என்பன போன்ற செய்திகளைக் கேட்கும்போது ஔரங்கசீப்புக்கு ஒரே எரிச்சலாக இருக்கும். பெருந்திகிலுடன் அமைச்சர்களிடம், "சிவாஜியை அடக்க எந்தப் படைத்தலைவரை அனுப்பலாம்? பெரும்பாலும் நம் படைத் தலைவர்கள் எல்லோரும் அவரிடம் தோற்றுவிட்டதே!" என்பார் வெறுப்பாக.

பாரசீகத்தை இரண்டாவது ஷா அப்பாஸ் என்னும் அரசர் ஆண்டுவந்தார். சிவாஜியை அடக்க ஔரங்கசீபபினால் முடியவில்லையே என்று அவருக்கு ஆத்திரம். அவர் ஔரங்கசீப்புக்கு ஒரு கடிதம் எழுதினார்: "அரசர்களின் அரசர், சக்கரவர்த்தி என்று நீங்கள் உங்களைச் சொல்லிக்கொள்கிறீர்கள்; சிவாஜி ஒரு சிறிய ஜமீன்தார்; அவரை ஒழிக்க உங்களால் முடியவில்லையே! நாம் படையோடு பாரத நாட்டுக்கு வருகிறோம்; ஆட்சி புரிவது எப்படி என்று உங்களுக்குக் கற்றுத் தருகிறோம்!"

இந்தக் கடித்தைப் படித்ததும், ஔரங்கசீப் எவ்வளவு வெட்கம் அடைந்திருப்பார்!

'சிவாஜி' என்ற பெயரை யாராவது கூறினாலே ஔரங்கசீப்புக்கு அவமானமாக இருந்தது. சாவதற்கு முன் பாதுஷா தன்

மகனுக்கு எழுதிய இறுதி அறிவுரையில் அவர் கூறினர் : "நாட்டு நடப்புகள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்வதுதான், ஆட்சியின் முக்கிய வேலை. ஒரு கண அலட்சியம் ஆயுள் உள்ளவரை மனத் துன்பம் உண்டாக்கிவிடும். பார், அலட்சியம் காரணமாக அதிர்ஷ்டம் கெட்ட சிவாஜி நம் கையிலிருந்து நழுவிவிட்டான். அதன் விளைவு என்ன ஆயிற்று? சாகும் வரை எனக்கு நிம்மதி இல்லாமற் போய்விட்டது ; ஓயாத பாடும் படவேண்டியுள்ளது."

தம்முடைய வியத்தகு வெற்றிகளால் சிவாஜி அக்காலத்து ஹிந்துக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிர்ந்தார். அவரால் தான் ஹிந்து சமயம் பிழைத்தது. அவருடைய பெயரைக் கேட் டாலே ஹிந்துக்கள் பெருமிதம்கொண்டு நிமிர்ந்தார்கள்.

சிவாஜி வீரர் மட்டும் அல்லர். நற்குணங்களின் உறைவிட மாக அவர் விளங்கினர். தாய்ப்பாசம், குழந்தைப் பாசம், புலனடக்கம், சமயப்பற்று, துறவிகளிடம் மதிப்பு, எளிமை, உழைப்பு, சமய சமரச மனப்பான்மை, பெண்களிடம் மரியாதை — இவ்வளவு நல்ல பண்புகளும் அவரிடம் மண்டி இருந்தன.

அவர் சிறந்த பக்திமான், பஜனைகளில் ஆர்வத்துடன் கலந்துகொள்வார். துறவிகளுக்குப் பாத சேவை செய்வார். போராடிச் செல்லுகையில் முஸ்லீம்களின் 'குரான்' நூல் கிடைத் தால் அதை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து, யாராவது முஸ்லீமுக்குத் தானம் செய்வார். மசூதிகளையும் முஸ்லீம் மடங் களையும் அவர் தாக்குவதில்லை.

கபீகான் என்பவர் ஒரு வரலாற்று ஆசிரியர்; மிகத் தீவிரமான முசல்மான். அவர் சிவாஜியின் சாவைக் குறித்து எழுதும்போது, 'காபிர் நரகத்துக்குத் தொலைந்தான்' என்று குறிப்பிடுகிருர். ஆனல், அவர்கூடச் சிவாஜியின் ஒழுக்கவுயர்வைப் பாராட்டுகிருர். 'பர ஸ்தீரிகளைத் தாயாகப் போற்றுகிறவர்; இரக்கம் மிகுந்தவர்; எல்லாச் சமயங்களையும் சமநோக்குடன் பார்க்கிறவர்', என்று அவர் சிவாஜியைப் புகழ்கிருர்.

'ஹிந்து சுயராஜ்யம்' தான் சிவாஜியின் லட்சியம். ஆனல், அவருடைய அரசில் பல முஸ்லீம்கள் பொறுப்பான பதவிகளில் இருந்தார்கள். அவருடைய ஆட்சியில் எல்லா மதத்தவர்களும்

தங்கள் விருப்பம் போல் கடவுள் வழிபாடு நடத்த முடிந்தது; எல்லோருக்கும் முன்னேற்றத்திற்கான சமவாய்ப்பு கிடைத்தது. ஔரங்கசீப்பிடம் இப்பண்புகள் இல்லை. அவர் மதவெறி கொண்டவர்; ஹிந்துக்களைக் கொடுமைப்படுத்தினர் என்பது வரலாறு கண்ட உண்மை.

15. வீரமும் கருணையும்

வீர தீர சாகசச் செயல்களோடு, நுட்பமான ராஜதந்திர அறிவு துலங்க, அருஞ்செயல்கள் பல ஆற்றிய சிவாஜி மன்னர் எழுத்தறிவு இல்லாதவர் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். வியப்பான செய்தி என்றாலும் அது உண்மை. சிவாஜி மத்திய காலத்துப் பாரதத்தைச் சேர்ந்தவர். அக்காலத்தில் கல்வியறிவைப் போல் கேள்வி அறிவுக்கு மதிப்பு இருந்ததாய்த் தோன்றுகிறது. தவிர, இக்காலத்தில் படிப்பு என்பதன் நோக்கமே, பிழைப்புக் காகச் சம்பாதிப்பது என்றாகிவிட்டது; ஆனால், கல்வியையும் கேள்வியையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் கருவிகளாய் நம் முன்னோர்கள் கருதினார்கள். படித்தவன் என்றால் முன்பு 'படிந்தவன்' என்றால் பொருள் கொள்வார்கள்; இப்போதோ 'படிக்கிறவன்' என்றால் 'படுத்துகிறவன்' என்று பொருள் தோன்றுகிறதே! 'படித்தவர்கள்' எனப்படுவோர் இன்று வாழ்க்கையில் 'படுத்தவர்கள்' ஆகிக்கொண்டிருக்கிறார்களே!

சிவாஜி மட்டும் அல்ல, அவரைப் போன்ற மாவீரர்களான மகாராணா பிரதாபசிங், ரஞ்சித்சிங், ராஜ்சிங் முதலியோரும் எழுத் தறிவு அற்றவர்களே! ஆனால், கல்வியற்ற அவர்களிடம் எவ்வளவு உயர்ந்த ஒழுக்கம் இருந்தது! நன்றிக்கடன் தீர்ப்பதற்காகச் சிவாஜி மன்னர் தம் உயிரையே பணயம் வைத்த ஓர் அற்புதமான நிகழ்ச்சியைக் கேளுங்கள்.

ஔரங்கசீப் சூழ்ச்சி செய்து சிவாஜியைச் சிறையில் அடைத் தார்; சிவாஜி தம் நண்பர்களின் துணைவலியாலும், தம் அறிவுத் திறத்தாலும் சிறையிலிருந்து தப்பினார் என்பதை முன்பே படித்தோம். அவருடைய பிள்ளை சாம்பாஜியும், இணையில்லாத எஜமான பக்தர்களான தானாஜியும், யேசாஜியும் சிவாஜி தப்பிச் செல்லும்போது அவருக்குத் துணையாக இருந்தனர்.

சிறையிலிருந்து தப்பியாகிவிட்டது ; மீண்டும் முகலாயர்களிடம் சிக்கிக்கொண்டால் உயிருக்கே அபாயம் விளையும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால், மலைகளும் காடுகளும் மிகுந்த பாதைகளினூடே அவர்கள் சென்றனர். காட்டின் வழியே செல்லும்போது ஒரு சிங்கம் அவர்களைத் தாக்க முனைந்தது. சிவாஜி சிங்கத்தை எதிர்த்து வீழ்த்தினர் ; என்றாலும், அவருக்குப் பலத்த காயம். பச்சிலைகளையும் மரப்பட்டைகளையும் காயத்தின் மீது கட்டிக்கொண்டு அவர் நண்பர்களோடு சென்றார்.

அவர்கள் மூர்ஷிதாபாத் என்ற நகரத்தை அடைந்தனர். காயங்களின் விளைவாக மன்னருக்குக் காய்ச்சல் கண்டது. அவரை வெளியில் வைத்துக்கொண்டு எப்படிச் சிகிச்சை அளிக்க முடியும்? அவர் சிவாஜி என்று யாராவது கண்டுகொண்டால், அவர் கதி என்ன ஆவது? பகைவர்கள் அவரைப் பிடிக்கத் துடித்துக்கொண்டிருந்தார்களே ! சில நாட்கள் ஒரு வீட்டில் தங்கி, அரசரின் உடல் நலமுற்றதும் பிரயாணத்தைத் தொடரலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், ஊருக்கு முற்றிலும் புதியவர்களான அவர்களுக்கு இடம் தர யாரும் துணியவில்லை. சத்திரபதியின் உடல் நிலையைக் கண்டு மனமிரங்கிய விநாயகதேவ் என்ற ஏழைப்புலவர் அவர்களுக்கு உதவத் துணிந்தார். எல்லோரும் அங்கு தங்கினார்கள்.

மன்னருக்குச் சிகிச்சை நடந்தது ; காய்ச்சல் நின்றது ; காயங்கள் சற்று ஆறின. அவர் மற்ற மூவரையும் தெற்கே செல்லும்படி கட்டளை இட்டார். "குணமானதும் நான் பின்னால் வருகிறேன்" என்றார் அவர். அந்த நிலையில் அவரைத் தனியே விட்டுச் செல்ல அவர்களுக்கு மனமில்லை. அரசரின் ஆணையை மறுத்துப் பேசவும் அவர்களுக்குத் துணிவில்லை. மூவரும் அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள்.

தானாஜிக்கு அரசரைத் தனியாக விட்டுப் போக விருப்பமில்லை. அவர் யேசாஜியிடம், "சாம்பாஜியை அழைத்துக்கொண்டு நீ போ ; நான் அரசருக்குத் தெரியாமல் ஒளிந்திருந்து அவரைக் கவனித்துக்கொள்கிறேன்," என்று இருவரையும் அனுப்பிவிட்டு விநாயகதேவின் வீட்டைக் கண்காணித்து வந்தார்.

விநாயகதேவ் ஏழை ; இரந்துண்பவர். வயதான தாயையும் அகதியாக வந்த அரசரையும் பிச்சை எடுத்துக் காத்து வந்தார்.

அவ்விருவரும் உண்டதுபோக எஞ்சியதை அவர் உண்பார்; எஞ்சாவிட்டால் பட்டினி கிடப்பார்.

இந்தத் தியாகம் சிவாஜியை உள்ளுருக்கியது. அந்த ஏழைக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று சிந்தித்தார். ஒரு கடிதம் எழுதி அந்த நகரத்து முகலாய அதிகாரியிடம் கொடுக்கும்படி விநாயகதேவை அனுப்பிவைத்தார். புலவருக்குக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது; கடிதத்தை அதிகாரியிடம் தந்தார்.

அக்கடிதம் அதிகாரிக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. சிவாஜியைச் சிறைபிடிப்போருக்கு இரண்டாயிரம் ரூபாய் பரிசு தருவதாய் முகலாயச் சக்கரவர்த்தி அறிவித்துள்ள செய்தி உங்களுக்குத் தெரியும். இக்கடிதத்தோடு வரும் விநாயகதேவுக்கு இரண்டாயிரம் கொடுத்துவிட்டு, அவரோடு வந்தால் சிவாஜியைப் பிடிக்கலாம்,' என்று கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அதிகாரி விநாயகதேவுக்கு இரண்டாயிரம் ரூபாய் தந்தான். சிவாஜியைக் கைதுசெய்து பாதுஷாவிடம் இழுத்துச் சென்றால் அவனுக்கு எவ்வளவோ நன்மைகள் கிட்டுமே! ஆனந்தமாக அவன் விநாயகரோடு போனான்; நோயுற்றிருந்த சிவாஜியை மிக எளிதாகக் கைதுசெய்து சிறையில் பூட்டினான்.

என்ன நடக்கிறது என்பது புரியாமல் விநாயகர் விழித்துக் கொண்டிருந்தார். அதிகாரி தனக்கு ஏன் பணம் கொடுத்தான். நோயாளியை ஏன் கைது செய்தான்; நோயாளி மகிழ்ச்சியுடன் அதிகாரியைப் பின்பற்றிச் செல்லக் காரணம் என்ன என்பவை அவருக்கு விளங்கவில்லை. அனாதையாகத் தம்மிடம் வந்து பிச்சை புணவு உண்டுகொண்டிருந்தவர் சிவாஜி மகாராஜா என்பதே அவருக்குத் தெரியாது!

மறைந்திருந்த தானாஜி, அரசர் அதிகாரியோடு செல்வதைக் கண்டார்; ஏதோ விபரீதம் நடக்கிறது என்று அச்சம் அடைந்தார்; விநாயகரிடம் விரைந்து விவரம் கேட்டார். ஏழைப் புலவர் நடந்தவற்றை அப்படியே கூறினார்.

சிவாஜியின் நெருங்கிய நண்பர் தானாஜி. அரசரின் அரிய பண்புகள் யாவும் அவருக்குத் தெரியும். விநாயகருக்கு நன்றிக் கடன் செலுத்த, சிவாஜி முகலாய அதிகாரியிடம் சிறைப்பட்டார்

என்பதை அவர் புரிந்துகொண்டார். ஔரங்கசீப்பிடம் மீண்டும் அவர் சிக்கினுல் உயிரோடு வெளிவர முடியாது என்று அவருக்குத் தெரியும்; ஆயினும் விநாயகரின் ஏழ்மையும் பெருந்தன்மையும் அரசரின் மனத்தை உலுக்கிவிட்டன. தம் உயிரையே பணயம் வைத்து, தமக்கு உதவிய ஏழைக்கு உதவி புரிய அவர் துணிந்து விட்டார்.

இந்த உண்மையைத் தாஞ்ஜி விளக்கியதைக் கேட்டு விநாயக தேவ், பதறிப்போனுர்: 'எனக்குப் பணம் எதற்கு? நம் அரசரைக் காப்பாற்றுங்கள்!' என்று அவர் அலறினுர்.

சிவாஜியிடம் போர்ப் பயிற்சி பெற்றவர் தாஞ்ஜி; மாவீரர்; அரசருக்காக உயிரைத் துறக்கத் துணிந்தவர். எப்படியும் தம் எஜமானரைக் காப்பாற்றுவதென்று உறுதி பூண்டார். ஐம்பது முரடர்களுக்குப் பணம் கொடுத்து அழைத்துச் சென்று, மூர்ஷிதாபாதிலிருந்து டில்லிக்குச் செல்லும் வழியில் புதர்களுக்குப் பின்னுல் ஒளிந்துகொண்டிருந்தார்.

நள்ளிரவு; முகலாய அதிகாரி சிறையுண்ட சிவாஜியுடன் அந்த வழியே வந்தான்; கைதிக்குக் காவலாக இருபது வீரர்கள் வந்தனர்.

புதருக்குப் பின்னுல் ஒளிந்திருந்த தாஞ்ஜி திடீரென்று அவர்களைத் தாக்கினுர்; ஐம்பது வீரர்களுக்கு முன்னுல் இருபது பேர் என்ன செய்யமுடியும்? முகலாய வீரர்கள், சிவாஜியை விட்டு விட்டு, பிழைத்தால் போதும் என்று ஓட்டம் பிடித்தார்கள்.

தாஞ்ஜி சிவாஜியின் கால்களைக் கட்டிக்கொண்டு தேம்பினுர்!

வீரம் என்றுல் வெறும் முரட்டுத்தனம், கொடிய குணம், கொலைவெறி என்று சிலர் பொருள் கொள்கிருர்கள்; அது தவறு: வீரம் என்றுல் கருணை, பரந்த உள்ளம், நன்றியுணர்ச்சி மிகுந்த துணிவு என்பதை இந்த நிகழ்ச்சி விளக்குகிறதல்லவா?

16. வரலாறு எச்சரிக்கிறது !

சிவாஜியின் அரசியலும் நிர்வாக முறையும் புதுமையானவை அல்ல. அக்காலத்து அரசர்கள் தசரா முடியும்வரை காத்திருப் பார்கள்; பிறகு, அண்டை ராச்சியத்தின்மீது படையெடுத்து, தங்கள் ராச்சியத்தைப் பெருக்குவார்கள்; பாரத மன்னர்களின் ஆட்சி முறை இதுதான். மனு முதலிய சாஸ்திரக்காரர்கள், அரசர் கள் இந்த விதியைத்தான் பின்பற்ற வேண்டும் என்று எழுதி வைத்துவிட்டார்கள். தென் இந்தியாவின் முஸ்லிம் மன்னர்கள்கூட இந்த அரசியலைத்தான் கடைப்பிடித்தார்கள். அண்டை ராச்சியத்து அரசனுடன் போராடுவது, ஒரு வகையில் முஸ்லிம் அறம் எனலாம்; அண்டை நாட்டு 'காபிர்' அரசர்களுடன் போராடுவதைக் குரான் அனுமதிக்கிறது; 'காபிர்' அரசனைக் கொன்று அவனுடைய நாட்டைக் கைப்பற்ற வேண்டியது முஸ்லிம் அரசனின் அறமாகும். அண்டை நாட்டு மன்னனும் முஸ்லிமாக இருந்தால் இருவரும் போராடக் கூடாது.

முசல்மான்களின் அயல் நாட்டுக் கொள்கைக்கும் சிவாஜியின் அயல் நாட்டுக் கொள்கைக்கும் வியக்கத்தக்க ஒற்றுமை தென்படு கிறது. ஒரே ஒரு வேற்றுமை; முஸ்லிம் அறநூல்படி, ஒரு முஸ்லிம் மன்னன் மற்றொருமுஸ்லிம் மன்னனின் நாட்டைக் கொள்ளை யடிக்கக் கூடாது, ரத்தம் சிந்தும்படி செய்யக்கூடாது. முசல்மான் அரசர்கள் எல்லோரும் இந்த விதியைப் பின்பற்றினார்கள் என்று சொல்ல முடியாது; ஆனாலும், இதுதான் அவர்களுடைய அறம் என்பதைப்பற்றி ஐயமில்லை. சிவாஜியின் அயல் நாட்டுக் கொள்கையில் இந்த விதி இல்லை. ஹிந்துவானாலும் சரி, முஸ்லிம் ஆனாலும் சரி, கொடுமைப்படுத்தியே பணம் வசூலிக்கப்பட்டது. தீவிர மத நம்பிக்கை கொண்ட முஸ்லிம் அரசன், காபிர் அரசனை வென்று அவனை முஸ்லிமாக மதமாற்றுவதைத் தன் தர்மமாய்க்

கருதினன். போர் முடிந்ததும், தோல்வி கண்ட அரசன் முசல்மான் ராச்சியத்தில் ஒரு பகுதியாக அமைதியோடு ஆட்சி புரியத் தொடங்குவான். ஆனல், இவ்வாறு ராச்சியத்தை விஸ்தரிப்பது சிவாஜியின் நோக்கம் அல்ல. ஆண்டில் எட்டு மாதங்கள் மராட்டி சேனே அயல் நாடுகளைக் கொள்ளையடித்து வயிறு வளர்த்துக் கொண்டும், தீர்வை வசூல் செய்துகொண்டும் இருக்க வேண்டும் என்பதே சிவாஜியின் விருப்பம். ஆக, சிவாஜியின் சொந்த இராச்சியத்தில் எல்லா மதங்களும் சமமான மதிப்புப் பெற்றன; எல்லோருக்கும் பாரபட்சமில்லாத ஒரே விதமான நீதி வழங்கப் பட்டது. ஆனல், சிவாஜி அயல் நாட்டின்மீது படையெடுத்தால் பகைவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களைப் பழிவாங்கினர்.

சிவாஜி வீரர், நீதிமான் என்கிறோம்; அப்படியானல் அவருடைய ராச்சியம் என் நிலைக்கவில்லை ? அவர் நிறுவிய நாடு, அவர் மறைந்த ஆறே ஆண்டுகளுக்குள் எப்படி அழிவடைந்தது? மராட்டர்கள் ஒரு 'நாடாக' ஏன் மாற முடியவில்லை ? பாரதத்தைச் சேர்ந்த மற்ற அரசர்களையும், சாதியினரையும் போல் அவர்களும் விதேசிகளை எதிர்த்து ஏன் வெல்ல முடியவில்லை? வரலாற்றைப் புரட்டி நுட்பமாகப் பார்த்தால் இக்கேள்விகளுக்குக் கீழ்க்காணும் பதில்கள் கிடைக்கின்றன.

சிவாஜியின் தலைமையை ஏற்றபோது மராட்டர்கள் அந்நியர்களின் கொடுமைக்கு ஆட்பட்டு ஏழைகளாகவும் உழைப்பாளிகளாகவும் இருந்தார்கள். எளிமையாகவும் நேர்மையாகவும் அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுடைய சமூகத்தில் ஒற்றுமை இருந்தது; சாதி வேற்றுமையும் சண்டையும் இல்லை. சிவாஜியைப் பின்பற்றியதால் நாடு பெருகிற்று; அயல் நாடுகளில் கொள்ளையடித்த செல்வம் மகாராஷ்டிரத்தில் குவிந்தது; பணம் சேர்ந்ததும் அவர்கள் பழைய துன்பங்களை மறந்தார்கள்; ஒற்றுமை குலைந்தது. வீரத்தோடு கர்வமும் தற்பெருமையும் மிகுந்தன. சாதி வேற்றுமை வலுத்தது.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பிராமணர்கள் சாஸ்திரங்கள் ஓதுவதையும் ஓதுவிப்பதையும் கைவிட்டு, ஹிந்து முஸ்லிம் மன்னர்களின் அரசாங்கங்களில் பொறுப்புள்ள பதவிகளை ஏற்றுச் சுகமாய்க் காலம் கழித்தார்கள்; மராட்டர்கள் எழுத்தறிவே

இல்லாத சாதியினர். வாள் முனையிலும் ஏர் முனையிலும்தான் அவர்களுடைய பிழைப்பு நடந்தது. ஆனால், காயஸ்த சாதியினர் எப்போதுமே எழுத்து வேலை செய்பவர்கள்; அவர்கள் கல்வி பயின்று அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளில் இருந்தார்கள்; அவர்களுடைய செல்வாக்கும் மிகுந்து வந்தது. அதனால், பிராமணர்கள் அவர்களிடம் பொறாமை கொண்டார்கள். காயஸ்தர்களையும் அவர்களுடைய தலைவர்களையும் இழிவுபடுத்தினார்கள்.

சிவாஜி பட்டாபிஷேகம் செய்துகொண்டபோதே ஒரு தகராறு நடந்தது. மராட்டர்களை க்ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளப் பிராமணர்கள் இணங்கவில்லை. வைதிகச் சடங்குகள் செய்யவும், மந்திரம் ஓதவும் சிவாஜிக்கு உரிமை இல்லை என்று பிராமணர்கள் கூறினார்கள். அவர்களுடைய அகங்காரத்தைக் கண்டு சிவாஜி ஆத்திரம் அடைந்தார். ஒரு முறை அவர், "சாஸ்திரம் ஓதுவதும் பூஜை செய்வதுமே பிராமணர்களின் தொழில். பசித்திருப்பதும், ஏழ்மையை ஏற்பதும் அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய நோன்புகளாகும். அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பது அந்தணர்களுக்குப் பாவமாகும். ஆகையால், எல்லாப் பிராமண அமைச்சர்களையும், நீதிபதிகளையும், படைத்தலைவர்களையும், தூதுவர்களையும் அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து விலக்குகிறேன்; சாஸ்திர சம்மதமான பணிகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டியது ஹிந்து அரசரின் கடமை. நாமும் அவ்வாறே செய்கிறோம்" என்று கூறினார். பிராமணர்கள் அதைக் கேட்டு அச்சமுற்று, அவரிடம் கெஞ்சிக் கதறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டார்கள்.

இவ்வாறு பிராமணர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி, பிராமணர் அல்லாதாரை இழிவுபடுத்தத் தொடங்கினார்கள். பிராமணர்களுக்குள்ளும் ஒற்றுமை இல்லை; அவர்களுக்குள் பல உட்பிரிவுகள் இருந்தன; உயர்வு தாழ்வு பாராட்டினார்கள்; ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் மற்ற பிரிவைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து சாப்பிடவும் மாட்டார்கள்; ஒரு பிரிவினர் மற்ற பிரிவினரை ஒடுக்கி ஒழிப்பதையே தம் கடமையாகக் கருதினார்கள். ஆக, ஒரு சாதிக்கும் மறு சாதிக்கும் போராட்டம், சாதிக்குள்

போராட்டம் என்று சண்டை நடந்தவண்ணம் இருந்தது. இதன் விளைவாகச் சமூகம், கட்டுக்கோப்பு இழந்து குலைந்தது ; சிவாஜி யின் முயற்சிகள் எல்லாம் வீணாயின.

மராட்டர்கள் நாட்டை இழந்தார்கள் ; பாரதமெங்கும் பரவி யிருந்த புகழை இழந்தார்கள். அந்நியர்களிடம் அடிமைகளானார் கள். அப்போது அவர்கள் விழித்துக்கொள்ளவில்லை ; சாதிச் சண்டை இன்னும் ஓயவில்லை.

சாதிச்சண்டை எவ்வளவு கொடுமையானது! ஆயினும், நாம் இன்னும் அதை வளர்த்துக்கொண்டு இருக்கிறோமே; வரலாற்றின் எச்சரிக்கையைப் பாரத மக்கள் ஏற்க மாட்டார்களா ?

மராட்டர்களின் ஆட்சிக்காலத்தில், கல்வி, பொருளாதாரம், ஒற்றுமை ஆகியவற்றைப்பற்றி யாரும் சிந்திக்கவில்லை. முன்னேற்றத்துக்காக எவ்வித முயற்சிகளும் செய்யப்படவில்லை. ஹிந்துக்கள் கண்களை மூடிக்கொண்டு பழைய பாதையிலேயே சென்றுகொண்டிருந்தார்கள். அதே சமயம், ஐரோப்பியர்கள் அயராமல் உழைத்து முன்னேறிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு, முற்போக்கடைந்த, கட்டுப்பாடான ஆங்கிலேயருடன் மோதிய போது மராட்டிய சாம்ராச்சியம் துகளாகிவிட்டது. காலத்தோடு முன்னேறாததுதான், மராட்டர்களின் வீழ்ச்சிக்கு இரண்டாவது காரணம்.

மராட்ட மன்னர்களில் சிலர் அழகாக நிர்வாகம் நடத்தியதாக அறிகிறோம். ஆனால், மொத்தத்தில் அவர்களுடைய நிர்வாகத்தில் ஊழலும், லஞ்சமும் மலிந்திருந்தன. மக்களின் ஒழுக்க வலிமை குன்றியது. மராட்டர்களின் வீழ்ச்சிக்கு இது மூன்றாவது காரணம்.

ஆட்சியாளர்கள் மக்கள் நலனை மறந்தார்கள். தங்கள் இனத்தாரும், உற்றாரும், உறவினரும் உயர்வு பெற வேண்டும் என்பதே அவர்களுக்குக் கவலை. தாய்நாட்டு நலனைவிட, அதிகமாக தங்கள் முன்னோர்கள் ஈட்டிய நிலத்தின் நலனைக் கவனித்தார்கள். ஒரு சிறு கிராமத்தின்மீது நான்கு அரசர்கள் உரிமை கொண்டாடு வார்கள்; சண்டையிடுவார்கள் ; அந்நியர்களைத் தங்கள் உதவிக்கு அழைப்பார்கள். தங்கள் சுயநலத்துக்காக, நாட்டின் பகைவர்களை நண்பர்களாக வரவேற்கும் சின்னபுத்தி மராட்டர்களுக்கு இருந்தது. தங்கள் பரம்பரைச் சொத்து, பரம்பரை நிலம்

ஆகியவற்றைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்கு மேல், நாட்டுக்குப் பொதுவான நலன் என்பதுண்டு என்பதை அவர்கள் எண்ணிப்பார்த்ததே இல்லை ! ஒவ்வொருவரும் தன் சொந்தச் சொத்து, செல்வாக்கு, பெருமை ஆகியவற்றைப் பெருக்கிக் கொள்ள முயன்றுர்கள். சுயநலமிக்க, கட்டுப்பாடற்ற சமுதாயம் தானுகவே தனக்கு அடிமைத்தளையைத் தேடிக்கொள்கிறது. மராட்டப் பெரும் தலைவர்களில் பெரும்பாலோர் சுயநலமிகள். கடமை அறிவு இல்லாதவர்கள், கட்டுப்பாடு அற்றவர்கள். சிவாஜி தொடங்கிய பணியைத் தொடர்ந்து செய்ய அவர்களுக்கு ஆற்றல் இல்லை. மராட்டர்களின் வீழ்ச்சிக்கு இது நான்காவது காரணம்.

பொருளாதாரத்தைப் பொருட்படுத்தாமல் இருந்ததால்தான் மராட்டர்கள் வீழ்ந்தார்கள். விவசாய அபிவிருத்தி, தொழில் வளர்ச்சி, மக்களையும் வியாபாரிகளையும் பாதுகாத்தல், லஞ்ச ஒழிப்பு, நெடுஞ்சாலைகளையும் வீதிகளையும் செம்மையாக வைத்துக் கொள்ளல், நீதி மன்றங்களில் வழக்குகளை விரைவாக முடிப்பது, நாட்டின் செல்வ வளர்ச்சி, அதன் வாயிலாக அரசாங்கத்தை வலுப்படுத்திக்கொள்வது போன்ற முக்கியமான விஷயங்களை அரசர்களோ அமைச்சர்களோ கவனிப்பதில்லை. தங்கள் செல்வத்தையும் வலிமையையும் வளர்த்துக்கொள்வதிலேயே நாட்டமாக இருந்தார்கள் ; அதற்காகவே படை வலியும் பணவலியும் ஈடுபடுத்தப்பட்டன. இக்காரணத்தால் ஹிந்துக்கள், முசல்மான்கள், இராஜபுத்திரர்கள், ஜாட்கள், கன்னடியர்கள், வங்காளிகள் ஆகிய எல்லா இனத்தவருமே, மராட்டியர்களைத் தங்கள் பகைவர்களாய்க் கருதலானுர்கள். அவர்களுக்கு நண்பர்களே இல்லை. மராட்டர்களின் வீழ்ச்சிக்கு இது ஐந்தாவது காரணம்.

மராட்டர்கள் வீரர்களே ; ஆனுல், அவர்களுடைய தலைவர்கள் தந்திரத்தை ராஜதந்திரமாக எண்ணினுர்கள்; சூழ்ச்சியையே வழியாய்க் கொண்டார்கள். பொய்யால் இரண்டொரு முறைதான் மக்களை ஏமாற்றலாம். எப்போதுமே ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதை மராட்ட மன்னர்கள் அறியவில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்றுமல் இருப்பதும், நம்பிக்கைத் துரோகம் செய்வதும் அரசியல் ஆகாது. மராட்டப் படைத் தலைவர்களும் அமைச்சர்களும் தங்களுக்கு லாபம் கிடைக்கும்

என்ருல் சமாதான உடன்படிக்கைகளை மீறுவார்கள் ; அதற்காக அவர்கள் சற்றும் வெட்கப்படுவதில்லை. அவர்களை நம்பி யாரும் எந்தக் காரியத்திலும் இறங்கக்கூடாது.

நாட்டை ஆளுவதற்குப் போரும் ராஜதந்திரமும் தேவையே. அதன் வலியும், பகை வலியும் சீர்தூக்கிப் பார்த்துப் போர் துவக்க வேண்டும். ஆனால், மராட்டர்கள் ஆண்டுதோறும் ஏதோ ஒரு போரில் ஈடுபட்டவண்ணம் இருந்தார்கள் ; இந்த ஆண்டுப் போர்களால் அவர்களுக்கு ஓரளவு பொருள் கிடைத்தது. ஆனால், ஆண்டுதோறும் போர் வீரர்கள் மடிந்துவந்தார்கள். பகைவர்களும் அதிகரித்துக்கொண்டிருந்தார்கள். நெடுநோக்கு இல்லாத போர்களாலும் சிறுமை மிகுந்த ராஜதந்திரத்தாலும், சூழ்ச்சி செய்யும் கோணல் புத்தியாலும் மராட்டர்களின் வலிமை, நாளுக்கு நாள் குறைந்து வந்தது. மறுதரப்பில் விவேகமும் உறுதியும் புதுமையான படை வலிமையும் வாய்ந்த அயல் நாட்டு வணிகர்கள் நிதானமாக முன்னேறத் தொடங்கினர்கள் ; தங்களுடைய வலிமையை வளர்த்துக்கொண்டு, பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் பாரத நாட்டையே கைப்பற்றிவிட்டார்கள் ; மராட்டர்களும் ஆங்கிலேயர்களின் அடிமைகளானர்கள்.

இயற்கையின் தண்டனை அது !

மராட்டர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் படித்தோம்; அவர்கள் மட்டும் அல்ல, ராஜபுத்திரர்கள், சீக்கியர்கள் முதலியவர்கள் அடங்கிய பாரத சமுதாயத்தின் வீழ்ச்சிக்கும் மேலே கூறிய காரணங்கள் பொருந்தும். நமக்குள் வேற்றுமை, நமக்குள் சண்டை என்கிற ரீதியில் இந்த நாடு வாழ்ந்தால், சுயநலத்தையும் இனநலனையுமே நம் மக்கள் பாராட்டிக்கொண்டிருந்தால், உலகத்தோடு நாமும் முன்னேருவிட்டால், மீண்டும் நாம் அந்நியர்களின் அடிவருடிகளாக நேரிடும் என்று வரலாறு எச்சரிக்கிறது ; அந்த எச்சரிக்கையை நாம் புரிந்துகொள்வோமா ?

17. பாடங் கற்போம்

ஒரு நாடு புகழோடு வாழ்வதற்கு நீர்வளம் தேவை, நில வளம் தேவை, கனிவளம் தேவை, கானக வளம் தேவை. இவ்வளவு வளங்களோடு இருந்தும் பாரதநாடு அடிமை நாடாயிற்று. அதற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொள்ளப் பெரிய ஆராய்ச்சி அறிவு வேண்டாம் ; ஒற்றுமை இல்லாத ஒரே பலவீனத்தால் இந்த நாடு வீழ்ந்தது என்பதை நமக்கு வரலாறு தலையில் இடித்து உணர்த்துகிறது ; ஆயினும், நாம் அதை அடிக்கடி மறந்து வருகிறோம்.

சிவாஜியைப் போன்ற வீரர்கள் இந்நாட்டில் ஏராளமாய்த் தோன்ற வேண்டும். எழுத்தறிவு இல்லாத பட்டிக்காட்டுச் சிறுவனாக வாழ்க்கையைத் தொடங்கிய சிவாஜி, வலிமை வாய்ந்த பகைவர்களை வீழ்த்தி, மாமன்னர் ஆனதோடு, மராட்டர்களுக்கே பெருஞ்சிறப்புத் தேடித்தந்தார். அவருடைய கதை, வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

ஆனால், அண்டை வீட்டானை அடிப்பதை வீரம் என்று கருதும் முரடர்களால் நாட்டுக்குப் பெருமை ஏற்படாது. தாய் நாட்டைத் தாக்க வரும் பகை நாட்டானை வீழ்த்தும் திறத்தைத்தான் நாம் வீரம் என்போம் ; அந்த வீரத்தை வணங்குவோம் !



நாட்டுக்கு உழைத்த நல்லவர்

36

'நல்லவனாக வாழ்'. நல்ல அறிவுரைதான்! எப்படி நல்லவனாக வாழ்வது? தாய் சொல்லிய வீரக் கதைகளைக் கேட்டுப் பெரிய வீரரானார், சிவாஜி; அரிச்சந்திரன் கதையினால் சத்தியம் தவறாத மகானானார் மகாத்மா காந்தி. இதுபோன்ற நல்லவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தால் நிச்சயம் நல்லவனாக வாழலாம்.

நம் நாட்டிலே தோன்றிய வீரர்கள், தேச பக்தர்கள், அறிஞர்கள், மகான்கள், விஞ்ஞான மேதைகள் எத்தனை எத்தனையோ பேர். அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை, நல்ல தமிழில், எளிய நடையில் 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' என்னும் தலைப்பிலே வெளியிட்டு, தெய்வத்திற்குச் சமமான குழந்தைகளின் முன் பணிவன்புடன் படைக்கின்றோம். இவ் வரிசை நூல்களை வரிசையாக வாங்கி ஆதரவு தர வேண்டுகிறோம்.